# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENT

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 247 சனி, ஆகஸ்ட் 12, 2023 14 பக்கங்கள்




## மீண்டும் ஒரு அரகலயவா?

அகிலன்



## இனப்படுகொலை நினைவுகூரலுடன் எமது செயற்பாடுகள் நின்றுவிடக் கூடாது

மட்டு.நகரான்



## நான் வீழ்ந்தாலும் எனது மக்களிலிருந்து ஒரு வீரன் பிறப்பான்

பரணி கிருஸ்ண ரஜனி



© 2023 இலக்கு இணையம்

# இலங்கையில் அதிகரிக்கும் தற்கொலை மரணங்கள்

அண்மைக்காலமாக இலங்கையில் தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருகின்றது. இந்த மரணங்களில் தற்போது பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பல இளம் வயதினரின் மரணங்களும் பதிவாகி வருவது கவலை தருவதாக யாழ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் யாழ் நகர் பகுதியில் பல்கலைக்கழக மாணவி ஒருவரும், அதன் பின்பு தென்மராட்சி பகுதியில் இளம் குடும்ப பெண் ஒருவரும் தற்கொலை செய்துள்ளனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலும் ஒரு இலட்சம் பேருக்கு 15.6 பேர் என்ற விகிதத்தில் தற்கொலை செய்துள்ளனர். ஒருவர் தற்கொலை செய்யும் போதும், 15 பேர் தற்கொலை முயற்சி எடுக்கின்றனர். அதாவது தற்கொலை முயற்சியில் இருந்து தப்புகின்றனர்.

உலக மட்டத்தில் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கையில் இலங்கை 30 ஆவது இடத்தில் உள்ளது. 2015 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரையிலும் தற்கொலைகளின் எண்ணிக்கை குறைவடைந்தாலும், 2020 ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிகரித்துள்ளது.

கோவிட் பெரும் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகளே இதற்கான காரணமாக கருதப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு இலங்கையில் 2,833 ஆண்களும், 574 பெண்களும் தற்கொலை செய்துள்ளனர்.

உலக வங்கயின் 2019 ஆம் ஆண்டுக்கான தகவல்களின் அடிப்படையில் ஒரு இலட்சம் மக்களுக்கு இலங்கையில் 14 பேரும், சார்க் நாடுகளின் கூட்டமைப்பு நாடுகளான ஆப்கானிஸ்தானில் 4 பேரும், இந்தியாவில் 12.7 பேரும், பூட்டானில் 4.6 பேரும், பங்களாதேசத்தில் 3.7 பேரும், பாகிஸ்தானில் 8.9 பேரும் தற்கொலை செய்துள்ளனர்.

# அமெரிக்காவில் காட்டுத்தீ 67 பேர் பலி



அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தில் உள்ள மோய் தீவில் கடந்த வியாழக்கிழமை (10) ஏற்பட்ட காட்டுத்தீ வேகமாக பரவி வருகின்றது

இதில் சிக்கி இதுவரையில் 67 பேர் பலியாகியுள்ளதுடன் 100 இற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர்

மோய் தீவில் உள்ள போர் காட்சியகத்தில் பெருமளவான மக்கள் தஞ்சமடைந்துள்ளர்

தஞ்சமடைந்தவர்களுக்கான உதவிப்பணிகள் மேற்கொள்ளப் படுவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

காலநிலை மாற்றமே பல நாடுகளில் காட்டுத்தீ ஏற்படுவதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது

எனினும் அதனை கட்டுப்படுத்துவதில் உலக நாடுகளின் நடவடிக்கைகள் குறைவாகவே உள்ளது

# துப்பாக்கி பிரயோகத்தை அடுத்து ஹெயிட்டி அமெரிக்க தூதரகம் மூடப்பட்டது

ஹெயிட்டியில் நாளுக்கு நாள் வன்முறைகள் அதிகரித்து வருகின்றது. கடந்த சில வருடங்களாக அங்கு அரசியல் உறுதித்தன்மையற்ற நிலை காணப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை (8) ஹெயிட்டியின் தலைநகரில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அண்மையாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை தொடர்ந்து தூதரகத்தை மூடுவதாக அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

மேலும்பலமேற்குலகநாடுகளின் தூதரகங்களும் தமது நட




வடிக்கைகளை நிறுத்துவதாக தெரிவித்துள்ளன. தமது தூதரகத்திற்கான போக்குவரத்து வழிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஹெயிட்டியின் தலைநகரின் 80 விகிதமான பகுதிகள் ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு கடத்தல்கள் பாலியல்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இலங்கையில் அதிகரிக்கும் டெங்கு - 50,000 பாதிப்பு




இலங்கையில் இந்த வருடத்தின் ஏழு மாதங்களில் 58,000 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 38 இற்கு மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளதாக சுகாதாரத்துறை கடந்த செவ்வாய்கிழமை (08) தெரிவித்துள்ளது.

இது கடந்த வருடத்தை விட அதிகமாகும். மேற்கு மாகணத்திலேயே அதிக நோய் தொற்று பதிவாகியுள்ளது. நோய் தொற்று ஏற்பட்டவர்களில் 50 விகிதமானவர்கள் மேற்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள். இலங்கையில் மிகவும் ஆபத்தான 47 இடங்களை சுகாதார அமைச்சு இனங்கண்டுள்ளது.

கடந்த வருடம் 76 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இலங்கையில் நுளம்புகளால் பரவும் மலேரியா மற்றும் டெங்கு போன்ற நோய்களால் அதிக மக்கள் பாதிப்படைந்து வருகின்றனர். பருவகாலங்களில் மழை நீர் தேங்குவதால் நுளம்புகள் அதிகளவில் இனப்பெருக்கம் செய்யும் சாத்தியங்கள் அதிகரிக்கும் போது இந்த நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது.

# விக்டோரியாவை சந்திக்க மறுத்த நைஜெர் அரச தலைவர்



அண்மையில் இராணுவப் புரட்சி மூலம் நாட்டை கைப்பற்றிய மேற்கு ஆபிரிக்க நாடான நைஜெருக்கு சென்று புதிதாக பொறுப்பேற்றுள்ள இராணுவ அதிகாரிகளை அமெரிக்காவின் துணை வெளிவிவகாரச் செயலாளர் விக்டோரியா நியூலான்ட் கடந்த செவ்வாய்கிழமை (8) சந்தித்துள்ளார்.

மேற்குலகம் சார்பான முன்னாள் அதிபர் மெகமட் போசோமுக்கு ஆதரவாக அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் குரல் கொடுத்து வருகின்றன. படைத்துறை புரட்சியை தொடர்ந்து நைஜெருக்கான நிதி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மருந்து கொள்வனவுக்கு கொடுத்த நிதியை மோசடி செய்த அதிகாரிகள்

வைத்தியசாலைகளின் தேவைகளுக்கான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படும் நிதியை இலங்கை அரசு பயன்படுத்த தவறுவதால் தான் மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுவருவதாக கட்டுமாண முதலீட்டுத்துறை வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் நிதி நெருக்கடி காலத்தில் அவசரகால மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு வங்கி கடந்த வருடம் 100 மில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது. ஆனால் இலங்கை அதிகாரிகள் அதனை பயன்படுத்தவில்லை. இதனால் அங்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியதுடன், பெருமளவான



மக்கள் பாதிக்கப்பட்டனர்.

வழங்கப்பட்ட நிதி தொடர்பாக வங்கியின் சிறப்பு அதிகாரிகள் ஆய்வுகளை நடத்த கொழும்பு சென்றபோதே இலங்கை அரச அதிகாரிகளின் இந்த நடவடிக்கை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அதிகாரிகள் நிதியை தவறாக பயன்படுத்தியுள்ளனர். மருந்து

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பிரேசிலில் இடம்பெற்ற அமேசன் காடுகளை பாதுகாக்கும் மாநாடு

அமேசன் மழைக்காடுகளை சூழவுள்ள எட்டு நாடுகளின் தலைவர்கள் பிரேசிலில் கடந்த செவ்வாய்க்கிழமை (8) கூடி, காடுகளையும், சூழலையும் பாதுகாப்பது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

பொலிவியா, பிரேசில், கொலம்பியா, ஈகுவடோர், குயானா, பெரு, சுரிநேமே மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் இந்த இரு நாள் கருத்தரங்களில் பங்கு பற்றியிருந்தன.

அமேசன் மழைக்காடுகளின்



அழிவை முற்றாக தடுத்து 2030 ஆம் ஆண்டிளவில் பூச்சியத்திற்கு கொண்டுவருவேன் என தெரிவித்து பிரேசிலின் அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற முன்னாள் பிரேசில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# வல்வைப் படுகொலை என்பது கூட்டு இனஅழிப்பின் ஒரு வடிவம்



*தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையில் இந்தியாவின் பங்கு என்பது 1987 ஆம் ஆண்டு ஆரம்பித்து 2009 ஆம் ஆண்டுவரையில் படைத்துறை ரீதியாக தொடர்ந்த போதும், தற்போதும் இலங்கை அரசின் திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புக்கும் அது மறைமுகமாக துணைபோகின்றது.*

*தீவகத்தில் சீனாவிற்கு வழங்கப்பட்ட எரிசக்தி திட்டத்தை இலங்கை அரசுக்கு அழுத்தங்களை பிரயோகித்து தனதாக்கிக் கொண்ட இந்தியா, கிழக்கில் தமிழ் ஆளுனரை கொண்டுவர தனது ஆழுத்தங்களை பயன்படுத்தி இந்தியா, இலங்கை அரசின் காணி அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் போன்றவற்றை வேடிக்கை பார்த்து நிற்கின்றது.*

*இந்த நிலையில் தான் இலங்கையில் இந்திய படைகள் மேற்கொண்ட இனஅழிப்பின் உச்சமாக விளங்கிய வல்வை படுகொலை நாள் கடந்த 2 ஆம் நாள் நினைவுகூரப்பட்டுள்ளது.*

*இந்தியன் மைலாய் என இந்த படுகொலை விபரிக்கப்படுவதுண்டு. 1968 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் அமெரிக்க படையினர் வியட்னாமில் 347 அப்பாவி மக்களை படுகொலை செய்த நாள். இது மைலாய் படுகொலைகள் (My Lai Massacre ) என அழைக்கப்படுவதுண்டு.*

*இதேபோலவே 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 2 ஆம் நாள் யாழ் மாவட்டத்தின் வல்வெட்டித்துறையில் அமைதிப்படை என்ற போர்வையில் வந்திருந்த இந்திய படையினர் பெருமளவான தமிழ் மக்களை படுகொலை செய்திருந்தனர். அதனை இந்தியன் மைலாய் என அழைக்கப்படுவதுண்டு.*

*ஆகஸ்ட்டு 2,3 மற்றும் 4 ஆம் நாட்களில் கிராமத்தை சுற்றிவளைத்த இந்திய இராணுவம் பெருமளவான மக்களை கைது செய்த பின்னர் அவர்களை கூட்டம் கூட்டமாக சுட்டு கொலை செய்திருந்தது. இந்த சம்பவத்தில் 64 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 100 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர், 50 இற்கு மேற்பட்ட பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர். 200 இற்கு மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன. 40 இந்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் கொள்ளையிடப்பட்டு தீயிடப்பட்டன. 150 இற்கு மேற்பட்ட மீன்பிடி படகுகள் சேதமாக்கப்பட்டன. வல்வை நூலகமும் எரிக்கப்பட்டது.*

*இறந்தவர்களின் உடல்களை எடுத்து அடக்கம் செய்வதற்கு கூட இந்திய படையினர் அனுமதிக்கவில்லை. வியட்னாம் படுகொலை களுக்காக 26 அமெரிக்க படையினருக்கு எதிராக அமெரிக்க அரசு விசாரணைகளை மேற்கொண்டு அதில் ஒரு அதிகாரிக்கு மட்டும் ஆயுள் தண்டனை வழங்கியது.*

*ஆனால் வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற படுகொலைகளுக்கான இந்திய இராணு வத்தினருக்கு எதிராக எந்த வழக்கும்*

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

இலக்கு

# ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை சமூகப் பிரச்சனையல்ல இறைமைப்பிரச்சினையென நாடுகளுக்கு தெளிவாக்கப்படவேண்டும்

சிறிலங்காவின் அரசத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 15.08.2023 மீளவும் அனைத்துக்கட்சியினருடனான சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்தச் சந்திப்பின் முதன்மை நோக்கம் 'தேச இனம் ஈழத்தமிழர்கள் என்பதை மாற்றிச் சிறிலங்காவின் ஒரு 'சமூகம்' என மீள்வரைவுசெய்து, அவர்களின் பாதுகாப்பு அவர்களின் இறைமையுடன் கூடிய தன்னாட்சி உரிமையின் வழியான மாகாண பொலிஸ் முறையினூடு அமைவதை மறுத்தலாக அமையவுள்ளது.

இச்சந்திப்பின் துணை நோக்கமாக நிலப்பயன்பாட்டைப் பேணிப் பாதுகாப்பு அளிக்கும் உரிமையை மாகாணசபைக்கு இல்லாது செய்வதன் மூலம் தற்போது தமிழர் தாயகங்களில் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயம் வரை நடைபெற்று வரும் பௌத்த சிங்கள குடியேற்றங்கள், பௌத்த விகாரைகளை நில ஆக்கிரமிப்பு மூலம் அமைத்தல் என்ற அரசபயங்கரவாதத்துடன் கூடிய அனைத்துலகக் குற்றச் செயல்களை தடுக்க இயலாத நிர்வாகப் பரவலாக்கலை வழங்குவதற்கான அரசியலமைப்புத் திருத்த முன்மொழிவுகளை அரசியல் கட்சிகள் வழி பெறுதல் என்பதாக அமையவுள்ளது.

ஈழத்தமிழர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் சமூகப் பிரச்சினையாக மாற்றப்படும் ஈழத்தமிழர் இறைமைப் பிரச்சினை என அரசியல் ஆய்வாளர்கள் கூட்டிக்காட்டும் அளவுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சார்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர்ந்த மற்றைய ஈழத்தமிழ்ச் சிறிலங்காப் பாராளுமன்ற பிரதிநிதிகள் அனைவரும் சிறிலங்கா அரசத்தலைவருடன் உள்ளே பலத்த நல்லுறவும் உதட்டில் சிறிய முணுமுணுப்பும் உடையவர்களாகத் தங்கள் பிரதிநிதித்துவக் கடமைகளைச் செய்துவருகின்றார்கள். இவர்கள் அனைவரும் பொதுவெளியில் ஒருங்கிணைந்து ஒரே குரலாக ஒலித்தால் மட்டுமே ரணிலின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமிழர் தாயக நிலங்களை நாள் தோறும் பௌத்தமயப்படுத்தல் சிங்கள மயப்படுத்தல் செய்யும் இன்றைய இனத்துடைப்பு முயற்சிகளை முறியடிக்க முடியும்.

சிறிலங்காவின் சட்டத்துறைப் பேராசிரியர்களுள் முக்கியமானவரும் பல அமைச்சர் பதவிகளைச் சிறிலங்கா அரசாங்கங்களில் வகித்தவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அவர்களே 13வது திருத்தம் ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ளவொன்று அதனை நிறைவேற்று அதிகாரமுள்ள அரசத்தலைவரும் சட்டவாக்கத்துறையும் சட்ட அமுலாக்கத்துறையுமே நடைமுறைப்படுத்தப் பொறுப்பானவர்கள் அப்படியிருக்க இன்றைய அரசத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அதனை நடைமுறைப்படுத்தப் பாராளுமன்றமே அதிகாரம் அளிக்க வேண்டுமென்பது அரசியல் உள்நோக்கம் கொண்டதென்று வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். இனியாவது தமிழ் அரசியல்வாதிகளும் உலகுக்கு உண்மையைப் பேசுவார்களாக.

மேலும் பேராசிரியர் ஜி. எல் .பீரிஸ் சிங்களம் படித்தோர் குழாத்தினர் வேறு நாடுகளுக்குப் பெருமளவில் புலம்பெயரத் தொடங்கியுள்ளமை நாட்டுக்கான நீண்டகாலப் பேராபத்தாக அமையுமென எச்சரிப்பும் விடுத்துள்ளார். ஆனால் இந்தச் சட்டமாமேதை ஈழத்தமிழ் மக்களின் தொகையில் அரைவாசியானவர்கள் சிங்கள அரசாங்கங்களின் ஈழத்தமிழின அழிப்பு நடவடிக்கைகளால் கடந்த 67 ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்து வருவது குறித்து இவ்வாறான ஒரு கருத்துக் கூடத் தெரிவிக்காதது இவரின் அறிவுசார் நேர்மை எந்த அளவுக்கு உள்ளது என்பதை உலகு உணரவைத்துள்ளது. அவருடைய நேர்மை மட்டுமல்ல தமிழ் அரசியல்வாதிகளும் இதுவரை ஈழத்தமிழர் புலப்பெயர்வு நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்திய தாக்கம் பற்றி பேசாமல் தங்கள் நேர்மையையும் காற்றில் பறக்கவிட்டுள்ளனர். இந்த ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வே இலங்கைத் தீவின் பொருளாதார வங்குரோத்து நிலைக்கான தலைமைக்காரணியாக இன்று வரை தொடர்கிறது.

அத்துடன் ஈழத்தமிழர்களை இனஅழிப்புச் செய்வதற்கு படைகளை நிலைப்படுத்தவும் ஆயுதங்களையும் நவீன போர்க்கருவிகளையும் வாங்கிக் குவிக்கவும் இன்றுவரை சிறிலங்கா செலவழித்து வரும் இலங்கைத் தீவின் அனைத்து மக்களதும் உழைப்பின் வரிப்பணங்களதும் நிகர இலாபங்களதும் வீணடிப்பே, தற்போதும் இவ்வாண்டுக்கான வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையாக முதல் ஐந்து மாதங்களிலேயே 100000 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளமைக்கான காரணியாக உள்ளது.

அனைத்துலக நாணய நிதியத்தின் நிபந்தனைகளையோ அல்லது கடன்வழங்கியவர்களது நம்பிக்கையையோ இதுவரை உறுதியாகப் பூர்த்தி செய்யாத நிலையில் செப்டெம்பரில் அனைத்துலக நாணய நிதியத்தின் இரண்டாவது நிதிஉதவியைப் பெற இயலாத நிலையேற்படும். இந்நிலையிலும் கூட பொருளாதார வளர்ச்சிக்கான இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை உண்மையும் நேர்மையுமான முறையில் முன்னெடுக்கச் சிறிலங்காவுக்கு எந்த விருப்புமில்லை என்பது உறுதியாகத் தெரிகிறது. இந்நிலையில் மக்களுடன் மக்கள் தொடர்பென்ற உத்தியின் வழி ஈழத்தமிழருடன் உலகநாடுகள் தொடர்புகளை மேற்கொள்வது சமகாலப்பிரச்சினைக்கான தீர்வுகள் பலம்பெற வழிவகுக்கும். அத்துடன் வடபகுதி வரட்சியால் தாக்கப்பட்டுள்ள நிலையில் மனிதாய உதவிகளையும் உலக நாடுகள் சிறிலங்காவின் இறைமையை மீறி உதவ இது உதவும்.

அதே வேளையில் இலங்கைத் தீவில் பிரிக்ஸ் நாடுகள் எனப்படும் பிரேசில் ரஸ்யா இந்திய சீன தென்னாபிரிக்க நாடுகளின் கூட்டமைப்பு இலங்கைத் தீவில் தங்கள் தங்கள் நாட்டுப் பணங்களில் தங்கள் வர்த்தகத்தை வழக்காக்குவதன் மூலம் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி மாற்றப் பெறுமதியை நிலைப்படுத்தும் 'கோட்டட் மணி' என ஆங்கிலத்தில் சுட்டப்படும் விதந்துரைக்கப்பட்ட பணமாக உலக முதன்மை வகிக்கும் நிலையை மாற்ற முயல்வதன் வழி சமகாலத்திற்கான புதிய உலக அரசியல் ஒழுங்குமுறையை அமெரிக்காவை மையப்படுத்திய முனைவாக்கநிலையில் நின்று மாற்றி பன்நாட்டு பன்முகநிலையாக மாற்றுவதற்கான பகீரதப்பிரயத்தனங்களைச் செய்து வருகின்றன.

இந்நிலையில் புலம்பெயர் தமிழர்கள் ஒவ்வொருநாட்டுக்கும் அவர்கள் இன்றைய தேவைகளுக்கு உதவும் ஆற்றல் உள்ளவர்களாக இருப்பதை தெரியப்படுத்தி அவர்களுடன் நல்லுறவுகளை வளர்க்க முற்பட வேண்டும். இதற்கு ஈழத்தமிழர்கள் இன்றைய உலக அறிவுசார் பொருளாதாரத்திற்குத் தாங்கள் பங்களிக்க ஆயத்தமாக இருப்பதை பொருளாதார வர்த்தக பேரமைப்புக்களை உருவாக்கி உலகிற்கு உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறே உலக நாடுகள் பலவற்றினதும் குடிகளாகத் தாங்கள் வாழ்கின்ற நிலையில் தங்கள் உழைப்பின் மிகுதியை ஒருங்கிணைத்து கூட்டொருங்கான நிதிய அமைப்பின் மூலம் அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உலக நாடுகள் தங்களுடன் தொடர்பு கொள்ளச் செய்ய வேண்டும். இவைகளே இன்றைய நிலையில் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினையில் உலகம் அக்கறை கொள்ள வைப்பதற்கான வழிகளாக உள்ளன.

அதேவேளை இந்தியா இலங்கையில் தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கான அதன் தொடக்கப்புள்ளியாக 1987ம் ஆண்டு இலங்கை இந்திய அனைத்துலக உடன்படிக்கையின் வழியாகச் சிறிலங்காவின் அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தத்தை முழுஅளவில் நடைமுறைப்படுத்த அழைப்பு விடுத்து உலகநாடுகள் அமைப்புக்கள் ஈழத்தமிழரின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் இலங்கையில் தலையீடு செய்வதை தடுக்க முயல்கையில் ரணில் விக்கிரமசிங்காவோ தேவையற்ற பாராளுமன்ற அங்கீகாரம் என்பதை முன்னிறுத்தி 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மறுப்பது உலக நாடுகள் தலையீடு செய்வதற்கான நிலையை உருவாக்குமென இந்தியாவைக் கருதவைக்கிறது. அதன் பதில் வினையாகவே தமிழ்நாட்டுப் பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை அவர்களால் "என் மண் என் மக்கள்" என்னும் கச்சைதீவு மண்மீட்பு பாதயாத்திரை ஜனவரி 11 வரை தொடரவென ராமேஸ்வரத்தில் தொடங்கியது. இதில் உரையாற்றிய இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தலைவரும் இந்திய உள்துறை அமைச்சருமான அமித்ஷா இலங்கையில் தமிழருக்கு நடைபெற்றது இனஅழிப்புத்தான் என்ற பொருள்படப் பேசியும் 'டுவிட்' செய்தும் சிறிலங்காவுக்கான முதலாவது எச்சரிப்பை விடுத்துள்ளார்.

தமிழகத் தேர்தல் களத்தையொட்டிய வாக்குறுதிப்பாட்டு முயற்சியாக இதனை உள்நாட்டு நிலையில் பார்த்தாலும் வெளிநாட்டு நிலையில் கிழக்கிலும் மலையகத்திலும் தன்னிச்சையான நிலையிலும் வடக்கில் நட்புறவு நிலையிலும் இறைமைப் பகிர்வை ஏற்கனவே நடைமுறை அரசியலாக்கியுள்ள இந்தியா தனது நெறிப்படுத்தலுக்கு அப்பால் சிறிலங்கா செயற்படுவதை இலகுவில் பொறுத்துக்கொள்ளாது என்பது இப்போது தெளிவாகிறது.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் இறைமையுடன் கூடிய தன்னாட்சி அடிப்படையிலான தீர்வே ஈழத்தமிழர் இந்திய நட்புறவுக்கும் பரஸ்பர பாதுகாப்புடனான அமைதி வாழ்வுக்கும் வளர்ச்சிகளுக்கும் அடித்தளம் என்பதை புலம்பெயர் தமிழர்கள் இந்தியாவுடனான உரையாடல் மூலம் தெளிவாக்க வேண்டுமென்பதே இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**



# மீண்டும் ஒரு அரகலயவா?

அகிலன்

புலனாய்வுப் பிரிவினரால் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இரகசிய அறிக்கை ஒன்றுதான் கொழும்பு அரசியலில் கடந்த சில தினங்களாகப் பேசுபொருளாக உள்ளது. "கடந்த வருடம் இடம்பெற்றதைப் போன்ற மற்றொரு அரகலய மீண்டும் இடம்பெறலாம். அதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன" என்பதே ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்ட புலனாய்வு அறிக்கை. புலனாய்வு அறிக்கைகள் எப்போதும் இரகசியமாகவே இருக்கும். ஆனால், இந்த அறிக்கை வேண்டுமென்றே கசிய விடப்பட்ட ஒன்றாகவே தெரிகின்றது.

கடந்த வருடம் "கோட்டா கோ கம" ஆரம்பமாவதற்கு எரிபொருட்களின் தட்டுப்பாடு, மின்சாரப் பிரச்சினை, அத்தியவசியப் பொருட்களுக்கான மட்டுப்பாடு என்பவற்றால் மக்கள் எதிர்கொண்ட அவலங்கள் காரணமாக இருந்தது. இப்போது, நாட்டில் தொடரும் கடும் வரட்சி விவசாயிகள் மத்தியில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கினறது. கடந்த வருடம் உரப் பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை போன்றவற்றால் கடும் நெருக்கடியை எதிர்கொண்ட விவசாயிகள் இப்போது, கொஞ்சம் தலை நிமிர முற்பட்டுள்ள நிலையில், இயற்கையின் தாக்கம் அவர்கள் தலை நிமிர விடுவதாக இல்லை.

தொடர்வரட்சியால் விவசாயிகள் மத்தி யில் ஏற்பட்டுள்ள இந்த அமைதியின்மையை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு குறித்த விவசாயத் துறையில் உள்ள மக்களை அரசுக்கு எதிராக வீதிக்கு இறக்கி மீண்டும் ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இரகசிய அறிக்கையொன்றை கையளித்துள்ளார்கள். போராட்ட அலையை உருவாக்குவதன் பின்னணியில் முந்தைய போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு குழுவினர் இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வேலைத்திட்டத்தினை சீர்குலைப்பதே குறித்த குழுவின் முக்கிய நோக்கம் என்பதையும் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சதியின் பின்னணியில் உள்ள குழுக்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, சில ஊடகங்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ள புலனாய்வுப் பிரிவு, குறித்த ஊடக நிறுவனங்கள் மக்களை தூண்டும் வகையில் செய்திகளை வெளியிடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த ஊடகங்கள் எவை என்பது ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாம். அதேவேளையில், இந்தப் புலனாய்வு அறிக்கையில் இருப்பதாகக் கூறப்படும் மற்றொரு தகவலும் ஆச்சரியததையும், கேள்விகளையும் எழுப்புவதாக அமைந்தள்ளது.

இந்த விடயத்தில் எதிர்க்கட்சி மற்றும் தமிழ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக புலனாய்வு பிரிவு தகவல் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த உறுப்பினர்கள் யார் என்ற தகவலோ, குறிப்பிட்ட ஊடகங்கள் எவை என்ற செய்தியோ பகிரங்கப்படுத்தப்படவில்லை.

வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசங்கம் தண்ணீர் வழங்காது எனவும், உணவுப் பற்றாக்குறை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டி தண்ணீருக்காக போராட மக்களை வீதிக்கு இறக்குவதற்கு குறித்த குழு முயற்சிப்பதாகவும் புலனாய்வு அறிக்கை ஜனாதிபதியை எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

தெற்காசிய நாடுகளில் கடந்த இரண்டு மாதங்களாகத் தொடரும் கடும் வெப்பம் இலங்கையில் இப்போது ஒரு அரசியல் பிரச்சினையாக உருவாகப்போகின்றதா என்ற கேள்வியை இந்த புலனாய்வு அறிக்கை எழுப்புகின் றது.

விவசாயத்துக்கு நீரைத் திறந்துவிடுவதா, அல்லது மின்சாரத்துக்காக அதனைப் பயன்படுத்துவதா, என்ற கேள்வி கடந்த இரு வாரங்களாக விவாதிக்கப்பட்டது. விவசாயத்துக்காக நீரைத் திறந்துவிட்டால் மின் தடை தவிர்க்க முடியாததாகிவிடும். மறுபுறம், மின்சாரத்தை தடையின்றி வழங்க வேண்டுமானால், விவசாயத்துக்கு நீரைத் திறந்துவிட முடியாது என்ற நிலையில்தான் அரசாங்கம் திண்டாடிக்கொண்டிருந்தது. இறுதியில் சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து நீரைத் திறந்து விடுவதற்கும், மின்சாரத்தை தடையின்றி வழங்குவதற்கு தனியார் துறையை நாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலமாக இரண்டு பிரச்சினைகளையும் சமாளிக்க அரசாங்கம் முயன்றாலும், விவசாயிகளின் பிரச்சினை பாரதுாரமானதாகவே இருக்கின்றது.

சமனலவெவ அணைக்கட்டு அருகே விவசாயிகள் முன்னெடுத்த போராட்டத்தையடுத்து சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான அளவு நீரை திறந்துவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. ஆனால், வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு இது தீர்வாகப்போவதில்லை. இந்த நிலையில் விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பு தொடரத்தான் போகின்றது.

இதனை அடக்குவதற்கு "புலனாய்வு அறிக்கை"யை அரசாங்கம் கைகளில் எடுக்கப் போகின்றதா, அல்லது அதற்காகவென்றே இந்த புலனாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டதா என்ற கேள்வியும் எதிர்க்கட்சி வட்டாரங்களில் எழுப்பப்படுகின்றது. அரசாங்கத்தை விமர்சித்து - சங்கடத்துக்குள்ளாக்கும் இரண்டு ஊடக நிறுவனங்கள் ஏற்கனவே அரசாங்கத்தின் இலக்காக உள்ளன. அதனைவிட, அரசாங்கததை கடுமையாக விமர்சிக்கும் ஒரு தமிழ் அரசியல்வாதி ஒருவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் அரசாங்கத்தின் இலக்காகலாம். "புலனாய்வு அறிக்கை" அவ்வாறான சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது.

ரணில் பதவிக்கு வந்தபின்னர் அரகலயவின் முதுகெலும்பை பெருமளவுக்கு சிதைத்துவிட்டார். வெறுமனே அடையாளத்துக்காக சில போராட்டங்களை நடத்தக்கூடியவர்களாக அவர்கள் இருக்கின்றார்களே தவிர, கடந்த வருடத்தைப்போல தொடர் போராட்டம் ஒன்றை நடத்தும் அளவுக்கு அவர்கள் பலமாக இல்லை. ஆக, தற்போது வெளியாகியிருக்கும் "புலனாய்வு அறிக்கை" அரசியல் எதிராளிகளை அடக்குவதற்கும், ஊடக நிறுவனங்கள் சிலவற்றின் வாயை மூடுவதற்காகவும் தயாரிக்கப்பட்டதாக இருக்கலாம் என எதிரணியினர் கருதுவதும் சரியாக இருக்கலாம் என்றே தோன்றுகிறது.

சமனலவெவ பகுதியில் நீருக்கான போராட்டத்தை விவசாயிகள் ஆரம்பித்த போதே இந்த "புலனாய்வு அறிக்கை" வெளிவந்திருந்தது. விவசாயிகளின் போராட்டம் தீவிரமடையலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருந்தது. தற்போது நாட்டில் காணப்படும் கடும் வரட்சி இன்றும் சில வாரங்களுக்குத் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளே காணப்படுவதாக, வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆக, இந்தப் போராட்டம் இப்போது நிறுத்தப்பட்டிருப்பது தற்காலிகமான ஒன்றாகவே இருக்கும்.

அதேவேளையில், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இப்போது சிக்குப்பட்டுப் போயுள்ளது. தொழிலாளர்களைப் பாதிக்கும் வகையில் ஊழியர் சேமலாப நிதியத்தில் அரசாங்கம் கையை வைத்திருப்பது தொழிலாளர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குள் சிக்குண்டுள்ள அரசாங்கம் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நலன்களைப் பற்றி சிந்திக்கும் நிலையில் இல்லை. இந்தப் பின்னணியில் விவசாயிகளினதும், கொந்தளிக்கும் தொழிலாளர்களையும் திசை திருப்புவதற்காக அவர்கள் கண்டுபிடித்துள்ள ஒன்றுதான் இந்தப் "புலனாய்வு அறிக்கையா" என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

• • •

# இனப்படுகொலை நினைவுகூரலுடன்

# எமது செயற்பாடுகள் நின்றுவிடக் கூடாது

மட்டு.நகரான்

கிழக்கின் வரலாற்றில் மறக்கமுடியாத நாளாக இன்றையதினம்(12ஆம்திகதி) காணப்படுகின்றது. 1990-08-12ஆம் திகதி கிழக்கின் அம்பாறை மாவட்டத்தின் வீரமுனை படுகொலை நடைபெற்று 33வருடங்களை கடந்தும் நினைவு கூரும் நாளாக கருதப்படுகின்றது.



இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தென் தமிழீழம் என்பது மிகவும் முக்கியத்துவம்பெறுகின்றது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் தமிழர்கள் முன்வைத்துவரும் உரிமைக்கான கோசத்தின் அடிநாதமாக விளங்குவது தென் தமிழீழமாகிய கிழக்கு மாகாணமாகும்.

தமிழர் விடுதலைப்போராட்டத்தில் சதையும் இரத்தமும் தாங்கியதாக கிழக்கு மாகாணம் இன்றும் காட்சியளிக்கின்றது. தமிழர்களின் விடுதலைப்போராட்டத்திற்கு முன்பிருந்தே சிங்கள பேரிவாதத்தின் கோரமுகத்தின் வெளிப் பாடுகளை பல தடவைகள் அனுபவித்த மாகா ணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது.

அதன்காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் கிழக்கு மாகாணம் தொடர்பில் உறுதியான கொள்கையுடன் நின்றார். அவரின் உறுதிப்பாடே பல்வேறு கொலைக்களங்களையும் தாண்டி இன்று கிழக்கு மாகாணம் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் 1956ஆம் ஆண்டு தொடக்கம் இனங்களிடையே பிரிவினைவாதத்தினை கிழக்கில் ஊட்டிவளர்க்கும் செயற்பாடுகளை பெரும்பான்மை அரசுகள் முன்னெடுத்துவந்தன. கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாகவுள்ள தமிழ் பேசும் சமூகளை மோதவிட்டு அதன்மூலம் தமது தேவையினை பூர்த்திசெய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டன.

இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டதன் பின்னர் கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் உருவாக்கப்பட்டு தமிழர்கள் மீது படுகொலைகள் முன்னெடுக்கப்படுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



அன்றைய காலத்தில் அரசாங்கத்தின் கீழ் செயற்பட்ட தமிழ் ஒட்டுக்குழுக்கள் பயன்படுத்தப்பட்டு முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டு அந்த தாக்குதல்கள் தொடர்பில் விடுதலைப்புலிகள் மீது பழிசுமத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறானஒருநிலையிலேயேஅம்பாறை மாவட்டத்தின் வீரமுனை படுகொலையும் முஸ்லிம் ஊர்காவலம் படையினரைக்கொண்டு நடாத்தப்பட்ட மிகப்பெரும் இன அழிப்பாக கருதப்படுகின்றது.

கிழக்கின் அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான படுகொலைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. எண்ணிலடங்கா தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டதுடன் பல கிராமங்கள் அழிக்கப்பட்டு தமிழர்கள்துரத்தியடிக்கப்பட்டனர். துரத்தியடித்தும் செல்லாதவர்கள் மீது படுகொலைகள் நடாத்தப்பட்டன.



இவ்வாறான பல கொலைகள் நடைபெற்றுள்ள நிலையில் இன்றையதினம் வீரமுனைப் படுகொலை நாள் அனுஸ்டிக்கப்படுகின்றது. 30வருடங்களை கடந்துள்ள நிலையில் வீரமுனைப் படுகொலையினை மீட்டவேண்டிய அவசியம் இருக்கின்றது. இன்று அபிவிருத்திக்காக தமிழ் இளைஞர்களின் உணர்வுகள் திசை திருப்பப்படும் நிலையில் இவ்வாறான படுகொலைகளை எதிர்கொண்ட கிராமங்கள் தொடர்ச்சியாக தமிழ் தேசியத்திற்காக செய்த அர்ப்பணிப்புகளை இன்றைய இளைஞர்கள் அறிந்துகொள்ளவேண்டிய அவசியம் இருக்கின்றது.

1990ஆம் ஆண்டு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினருடன் சேர்ந்து சம்மாந்துறை மற்றும் அதனை சூழவுள்ள முஸ்லீம்கள் வீரமுனை கிராமத்தில் தமிழ் மக்களை வெட்டிக்கொலை செய்து அக்கிராமத்திலிருந்து வெளியேற்றியிருந்தார்கள்.

1990களில் வீரமுனை பிள்ளையார் கோவில் உட்பட சைவ ஆலயங்களில் தஞ்சம் அடைந்திருந்த தமிழ் மக்களை முஸ்லீம் ஊர்காவல் படையினர் ஈவிரக்கமின்றி வெட்டி கொலை செய்தனர். பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்தனர். கைக்குழந்தைகளை கூட இரண்டு துண்டாக வெட்டி வீசினர். வீரமுனை தமிழ் கிராமத்தில் தமிழர்கள் மீது 1990ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு சில படுகொலைகளை திகதி வாரியாக இங்கே தருகிறேன்.



20.06.1990 வீரமுனை பிள்ளையார் கோவில் படுகொலை அதிரடிப்படை மற்றும் முஸ்லீம் ஊர்காவல்படையினரால்69தமிழர்கள்படுகொலை 05.07.1990 வீரமுனையில் 13 தமிழர்கள் படுகொலை 10.07.1990 வீரமுனையில் 15 தமிழர்கள் படுகொலை . 16.07.1990 மல்வத்தை இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல்படையினருமாக சுமார் 30 பேர் 8 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்தனர். 26.07.1990 வீரமுனையில் 23 சிறுவர்கள் உட்பட 32 இளைஞர்கள் முஸ்லீம் ஊர்காவல்படையினராலும் விசேட அதிரடிப் படையினராலும் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர். 01.08.1990 சவளக்கடையில் 18பேர் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர். 12.08.1990 வீரமுனை அகதி முகாமில் புகுந்த முஸ்லீம் குழு வாள்களால் வெட்டி தாக்குதல் நடத்தியது. இதில் ஆலய பரிபாலனசபை தலைவர் தம்பிமுத்து சின்னத்துரை உட்பட 97 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். வீரமுனையில் 600வீடுகளும், சம்மாந்துறை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி கணபதிபுரம், மல்வத்தை ஆகிய கிராமங்களில் இருந்த 1352 தமிழர்களின் வீடுகள் முஸ்லீம்களால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டது. 20.06.1990க்கும் 15.08.1990க்கும் இடைப்பட்ட காலத்தில் வீரமுனையில் மட்டும் 232 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 1600க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது. இதனை முன்னின்று செய்தவர்கள் அயல்கிராமமான சம்மாந்துறையை சேர்ந்த முஸ்லீம்கள்.

வீரமுனை சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலய படுகொலை என்பது இன்றைய தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. 1990ஆண் ஆண்டு காலப்பகுதியில் வளத்தாப்பிடி,மல்வத்தை,மல்லிகைத்தீவு,வீரச்சோலை உட்பட எட்டு கிராமங்களின் மக்கள் வீரமுனை சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலயம்,வீரமுனை இராமகிருஸ்ண மிசன் ஆகிய பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்தனர். அவர்கள் தொடர்ச்சியாக சுற்றிவளைக்கப்பட்டு ஆண்கள் கைதுசெய்யப்படுவதும் காணாமல்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பிழையான பதிவுகள்

துரைசாமி நடராஜா

ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் சனத்தொகை கணக்கெடுப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் மிக்க ஒரு விடயமாக கருதப்படுகின்றது. ஒவ்வொரு இனங்களைப் பொறுத்தவரையிலும் இது முக்கியமானதேயாகும். இந்த வகையில் இறுதியாக இலங்கையில் 2012 ம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பு இடம்பெற்ற நிலையில் 2023/2024 ம் ஆண்டிக்கான சனத்தொகை கணக்கெடுப்பை விரைவில் நடாத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் புள்ளிவிபரத் திணைக்களத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்நிலையில் இந்திய வம்சாவளி மக்கள் கணக்கெடுப்பின்போது உரியவாறு தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த முனைதல் வேண்டுமென்றும் தவறும் பட்சத்தில் பாதக விளைவுகள் பலவற்றையும் சந்திக்க வேண்டியேற்படுமென்றும் புத்திஜீவிகள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

சனத்தொகைகணக்கெடுப்பு என்பது காலத்துக்கு காலம் உலக நாடுகளில் இடம்பெற்று வருகின்றது. பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கணக்கெடுப்பு இடம்பெற்று வருகின்றது. இதன்படி நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தினை திட்டமிடுவதற்கும் சகல நபர்கள் பற்றிய தகவல்களை திரட்டுவதற்கும் சனத்தொகை கணக்கெடுப்பு அவசியமாகின்றது. மேலும் நாட்டின் கொள்கைத் திட்டமிடலை தயாரிப்பதற்கான முக்கிய தகவல்களை திரட்டுவதற்கும் சனத்தொகை கணக்கெடுப்பு தோள் கொடுக்கின்றது. தேசியமட்டத்திலிருந்து கிராம உத்தியோகத்தர் பிரிவு வரையான சிறுநிர்வாகக் கூறுகள் வரைக்கும் இச் சனத்தொகை கணக்கெடுப்பு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும். தரவுகளை பயன்படுத்துவோர் எந்தவொரு அபிவிருத்தி செயல் திட்டங்களுக்காகவும் சிறுநிர்வாக அலகுகளின் தரவுகளை பயன்படுத்த முடியும். நிர்வாகக் கடமைக்காக சனத்தொகை வளர்ச்சி, பரம்பல் மற்றும் எதிர்கால வளர்ச்சி பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்காகவும் சனத்தொகை கணக்கெடுப்பு தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன. சனத்தொகை கணக்கெடுப்பின் நிரற்படுத்தும் படிமுறையின்போது நபர்கள் வசிக்கும் சகல கட்டிடங்களும் உட்படுத்தப்படும் வகையில் பட்டியலொன்று தயாரிக்கப்படும். சனத்தொகை கணக்கெடுப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் ஊடாக நடைபெறும் பல்வேறு அளவீடுகளிற்காக மாதிரிகளை தெரிவு செய்வதற்கும் இப்பட்டியல் பாவிக்கப்படும். இதைப்போன்று பல நன்மைகள் சனத்தொகை கணக்கெடுப்பின் ஊடாக கிடைக்கப்பெறுகின்றது .

இந்த வகையில் இலங்கையின் முதலாவது சட்டப்படியான சனத்தொகை கணக்கெடுப்பு 1871 மார்ச் 27 ம் திகதி நடாத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1881, 1891, 1901, 1911, 1921, 1931, 1946, 1953, 1963, 1971, 1981 ஆகிய ஆண்டுகளில் சனத்தொகை கணக்கெடுப்பு இடம்பெற்றது. 1991 இல் சனத்தொகை கணக்கெடுப்பு இடம்பெறாத நிலையில் 2001 ம் ஆண்டில் 25 நிர்வாக மாவட்டங்களுள் 18 மாவட்டங்களில் மட்டுமே சனத்தொகை மதிப்பீட்டினை நடாத்த முடிந்தது. 2012 ம் ஆண்டு 14 ஆவது சனத்தொகை கணக்கெடுப்பு நாட்டில் இடம்பெற்ற நிலையில் 15 ஆவது சனத்தொகை கணக்கெடுப்பே விரைவில் இடம்பெறவுள்ளது. சனத்தொகை கணக்கெடுப்பின் முக்கிய நோக்கம் மக்களின் எண்ணிக்கையை கணக்கெடுப்பதாக இருப்பினும் இதற்கு மேலதிகமாக இன்னும் தகவல்கள் பலவும் திரட்டப்படுகின்றன. இந்தத் தகவல்களை அரச கொள்கை வகுப்பாளர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், உட்பட கல்வியியலாளர்கள் பலரும் பயன்படுத்துகின்றனர்.

### புத்திஜீவிகளின் வலியுறுத்தல்

சனத்தொகை கணக்கெடுப்பின்போது ஒவ்வொரு இனத்தவரும் முறையாக தாங்கள் குறித்த விடயங்களை பதிவிடுதல் வேண்டும். இதனால் அரசியல், தொழில்வாய்ப்பு, அபிவிருத்தி போன்ற பல விடயங்களிலும் முன்னேற்றகரமான போக்கினை அடைந்து கொள்ள முடியும். இந்நிலையில் ஒவ்வொரு இனத்தவரும் தங்களது இன அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக இந்திய வம்சாவளி மக்கள் தமது அடையாளத்தை "இந்தியத் தமிழர்" என்று தெளிவாக அடையாளப்படுத்த வேண்டும். எனினும் கடந்த காலங்களில் இதில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதனையும் அறிந்து கொள்ள முடிந்தது. இதனால் இந்திய வம்சாவளியினரின் எண்ணிக்கையில் வீழ்ச்சிப் போக்கு ஏற்பட்டது.

1948 ம் ஆண்டு அதிகாரம் கிடைக்கப்பெற்று இரண்டு வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் இந்திய வம்சாவளி தமிழர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 11.8 வீதமாகக் காணப்பட்டது. சிங்களவர்களுக்கு அடுத்த நிலையில் இரண்டாவது சிறுபான்மை இன மக்களாக காணப்பட்டனர். இந்நிலை 1955ம் ஆண்டு வரை நீடித்தது. 1955 ம் ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டில் இலங்கையின் மக்கள் தொகையில் 974,000 பேராகக் காணப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் மொத்த மக்கள் தொகையில் 12.0 வீதமாக இருந்தனர். இக்கணக்கெடுப்பில் வடக்கு கிழக்கு பிரதேசத்தை தாயகமாகக் கொண்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 10.9 வீதமாக மட்டுமே காணப்பட்டனர். எனினும் 1955 காலப்பகுதியைத் தொடர்ந்து இலங்கையின் மக்கள் தொகையில் இந்திய வம்சாவளியினர் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. 2001 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள்தொகையில் 5.1 வீதமாக மூன்றாவது சிறுபான்மை இன மக்களாக தமது எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சியினைக் கொண்டவர்களாக இந்திய வம்சா வளி மக்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்தகால சனத்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்கள் பெருக்கத் தொகையை கணிப்பிடுமிடத்து 2012 இல் இலங்கையில் இருந்த இந்திய வம்சாவளி தமிழர்களின் எண்ணிக்கை 14,44,184 ஆகும். இது நாட்டின் மொத்த சனத்தொகையில் 7.1 வீதமாக இருந்தது. இந்நிலையில் அரசியலின் சகல மட்டங்களிலும் இம்மக்களின் பிரதிநிதித்துவம் 7.1 வீதம் என்பதனை வலியுறுத்த வேண்டும். மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் ஆறு இலட்சத்து 4,680 இந்திய வம்சாவளியினர் தம்மை இலங்கை தமிழர்களாக பதிவு செய்து கொண்டுள்ளதை அறியமுடிகின்றது. மேலும் 2012 ம் ஆண்டு தகவலின்படி 22 இலட்சத்து 69,266 பேர் இலங்கை தமிழர்களாவர். இவர்களுள் மேற்கூறிய 604,680 பேர் இந்திய வம்சாவளியினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் இலங்கை தமிழர்களின் தொகை 16 இலட்சத்து 64,586 ஆகவே காணப்பட வேண்டும். அல்லது மொத்த சனத்தொகையில் 11.2 வீதம் என்பதற்கு பதிலாக 8.14 வீதமாக இது அமைதல் வேண்டும். இதனை மனதிருத்தி இந்திய வம்சாவளியினருக்குரிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முன்வர வேண்டுமென்று புத்திஜீவிகள் ஏற்கனவே வலியுறுத்தி இருக்கின்றனர்.

மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடம்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். இதற்கு பல்வேறு காரணிகள் உந்துசக்தியாக அமைந்திருக்கின்றன. குறிப்பாக அபிவிருத்தி என்கிற போர்வையில் மலையகத்தின் தேயிலை விளைநிலங்கள் சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இங்குள்ள மக்களின் இருப்பு கேள்விக்குறியாகின்றது. இதனால் இவர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று குடியேறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதைவிட தோட்டங்களில் வேலையின்மை நிலைமைகள் ஏற்படுகின்றபோதும் மக்கள் வருமான ஈட்டலுக்காக இடம்பெயர்வினை மேற்கொள்கின்றனர். வன்செயல்கள்போன்ற நிலைமைகளும் இடம்பெயர்விற்கு தூபமிடுகின்றன. குறிப்பாக 1958, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் மலையக மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டமை காரணமாகவும், 1972 ம் ஆண்டில் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் ஏற்பட்ட வேலையின்மை பிரச்சினை, உணவுப் பற்றாக்குறை என்பவற்றால் ஏற்பட்டபாதிப்புக்களினாலும்கணிசமானவர்கள் வட மாகாணத்திற்கு சென்று குடியேறினர். இவ்வாறு சென்றவர்கள் இலங்கைத் தமிழர்கள் செறிந்து வாழும் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் அதிகமாக குடியேறி இருந்த நிலையில் காலப்போக்கில் இவர்கள் தமது இந்திய, மலையக அடையாளங்களைக் கைவிட்டு உள்ளூர் மக்களுடன் கலந்துவிடும் போக்குகள் மேலெழுந்து காணப்பட்டதாகவும் புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### தாழ்வுச் சிக்கல்

இது இந்திய வம்சாவளி மக்களின் கலாசார, பண்பாடுகள் மழுங்கடிங்கடிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது என்பதனை மறுப்பதற்கில்லை. அதேவேளை இத்தகையோர் சனத்தொகை கணக்கெடுப்பின்பின்போது தங்கள் அடையாளத்தை 'இலங்கைத் தமிழர்' என்றே பதிவிட்டு வருகின்றனர். இதனால் இந்திய வம்சாவளி மக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக் கையில் அதிகரிப்பும் ஏற்பட வாய்ப்பாகியுள்ளது. இதேவேளை மலையகத்தில் உள்ள 'இந்திய வம்சாவளியினர்' சிலர் இந்திய வம்சாவளியினர் என்று தம்மை பதிவு செய்து கொள்வதை தாழ்வுச் சிக்கலாக கருதுகின்றனர். இந்திய வம்சாவளி என்று பதிவிட்டால் தமக்கு உரிய அங்கீகாரமும் மதிப்பும் கிடைக்காது. மேலும் தொழில் வாய்ப்புகளிலும் பின்னடைவு ஏற்படும் என்ற பிழையான மனநிலையுடன் சில இந்திய வம்சாவளியினர் இலங்கைத் தமிழர் என்று பதிவிடுகின்றனர். இது 'நமக்கு நாமே குழிதோண்டிக் கொள்வதற்கு' ஒப்பானதாகும். இத்தகைய போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இம்முறை சனத்தொகை கணக்கெடுப்பின்போது இந்திய வம்சாவளியினர் தமது அடையாளத்தை ஆவணங்களில் இந்திய வம்சாவளியினர் என்றே பதிவிட வேண்டும். இதனால் எவ்வித கௌரவக் குறைச்சலோ அல்லது பாதிப்போ ஏற்படாத நிலையில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தடைகளை கடந்து வாய்ப்புக்களினூடு வெற்றிகளை எமதாக்குவோம்

கொனீபாவால் போர்த்துக்கல்லில் 08/08/2023 இல் நடாத்தப்பட்ட நாடுகளற்ற தேசங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் இறுதிப் போட்டியில் வெற்றிவாகை சூடிய தமிழீழ உதைபந்தாட்ட அணிக்கு **இலக்கின்** நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கின்றோம். இந்த வெற்றிக்காக உழைத்த உதைபந்தாட்ட வீரர்கள், பயற்சியாளர்கள், நிர்வாகிகள் உட்பட அனைவரையும் நெஞ்சார வாழ்த்துகின்றோம். உலக அரங்கிலே தேசிய உடையணிந்து தேசிய கீதமிசைத்து எமது தேசத்தைப் பெருமை கொள்ள வைத்த நிகழ்வு அனைவர் நெஞ்சங்களையும் பெருமை கொள்ள வைத்துள்ளது. உலக அரங்கிலே எங்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்களை எல்லாம் பயன்படுத்தி தமிழீழ தேசத்தவர்களாக நாம் இயங்குவதற்கும் நாம் நிமிர்வு கொள்வதற்கும் இது போன்ற வாய்ப்புக்களை இன்னும் இன்னும் ஏற்படுத்த வேண்டும், அந்த வாய்ப்புக்களை நாமும் உருவாக்க வேண்டும்.. உலகத் தமிழினம் இது போன்ற விடயங்களுக்கு தம்மாலான வகைகளில் உதவி, இலக்கை நோக்கி எமது பயணத்தை விரைவுபடுத்துவோம்.















# அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக மக்களை கையாள அல்லது திசைதிருப்ப இசையை அரசாங்கங்கள் பயன்படுத்தக்கூடும் என்ற கருத்து இலக்கியம், ஊடகம் மற்றும் சதி கோட்பாடுகளில் பல்வேறு வழிகளில் ஆராயப்பட்ட ஒரு புதிரான கருத்தாகும்

ஸ்ரிவன் புஸ்பராஜா.க –அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை–



ஹிட்லரின் நாசிப்படைகள் தங்கள் அரசியல் நோக்கங்களை மறைப்பதற்கும் ஜேர்மன் மற்றும் சர்வதேச மக்களை ஏமாற்றுவதற்கும் அடிக்கடி கலை நிகழ்ச்சிகளை மக்களிடை நடத்தி மக்களை மயக்கும் பரப்புரைகளை மேற்கொண்டமை வரலாறு. அவர்கள் தங்கள் உண்மையான மனிதாயத்துக்கு எதிரான இன அழிப்புக் கருத்தியல் இலக்குகளை மறைக்கவும் குடிகளாகவுள்ள அப்பாவி பொதுமக்களுக்கு எதிரான போர் மற்றும் வன்முறையை நியாயப்படுத்தவும் நேச நாடுகள் மற்றும் யூத ஆக்கிரமிப்புக்கு ஜெர்மனி பலியாவதாகச் சித்தரித்தனர்.

அடோல்ஃப் ஹிட்லரை ஆதரிக்காத பெரும்பான்மையான ஜேர்மன் பொது மக்களை வெற்றி கொள்ள இந்தப் பரப்புரை உத்தி ஒரு முக்கியமான அரசியல் செயற்றிட்டக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. இது நாசிகளின் பாசிச வன்முறை இனஅழிப்புத் திட்டத்தை முன் னோக்கித்தள்ள உதவியது. இதற்கு மக்கள் தொகை யின் பரந்த பிரிவுகளின் ஒப்புதல், ஆதரவு அல்லது பங்கேற்பு தேவைப்பட்டது. அதற்கு கலை நிகழ்ச்சிகளை மக்களை திசை திருப்பப் பயன்படுத்தினர் என்பது ஆய்வாளர்கள் கருத்து.



இணங்காதவர்களை பயமுறுத்துவதற்கு பயங்கரவாதத்துடன் கலையை இணைத்து ஜோசப் கோயபல்ஸ் தலைமையிலான ஒரு புதிய அரச பிரச்சார இயந்திரம் ஜேர்மன் மக்களையும் வெளி உலகத்தையும் வெற்றிகரமாகக் கையாண்டு ஏமாற்றியது. மில்லியன் கணக்கான ஜெர்மானியர்களுடன் எதிரொலிக்கும் தேசிய ஒற்றுமை மற்றும் கற்பனாவாத எதிர்காலம் பற்றிய கவர்ச்சிகரமான செய்தியை பரப்புரையாகப் பரப்புரைசெய்தனர். ‘தேசிய சமூகம்’ என்ற நாசிப் பார்வையில் இருந்து விலக்கப்பட்ட யூதர்கள் மற்றும் பிறரை இனத்துடைப்பு, இனஅழிப்பு, செய்வதை இலகுவாக்கும் வகையில் பர்ப்புரைகளை அவர்கள் நடத்தினர். இது அடோல்ஃப் ஹிட்லரின் வெற்றிக்கான மூலோபாயமாக அமைந்தது.

ஈழத்தில் சிறிலங்காவின் இனஅழிப்பால் ஈழத்தமிழரின் நடைமுறையரசு பின்னடைவுற்று பதினான்கு வருடங்கள் முடிவுற்ற நிலையில் ஈழத்தமிழர்களை மீண்டெழுவதற்கான பலமற்ற இனமாக மாற்றுவதில் சிங்கள அரசு மிகவும் கவனம்செலுத்தி செயற்பட்டு வருகிறது. இறைமையுடன் கூடிய தன்னாட்சிக்கான தூயக மீட்புச் சிந்தனை எந்தவொரு ஈழத்தமிழனுக்கும் இருக்கக் கூடாது என்பதில் சிங்கள அரசும் சர்வதேசமும் திட்டங்களைவகுத்துச் செயற்படுகின்றது. அடுத்த தலைமுறைக்கு ஈழப்போராட்ட சிந்தனையே இருக்கக்கூடாது என்பதற்காக தாயகத்தில் போதைப்பொருள் பயன்பாட்டை ஊக்குவித்தும் புலத்தில் பல கேளிக்கை நிகழ்வுகளை அரச ஆதரவாளர்களூடாக நடத்தி தமிழ் இளையோர்களின் ஈழமக்கள் குறித்த ஆர்வத்தை அக்கறையை திசைதிருப்பும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. அடோல்ஃப் ஹிட்லரின் மூலோபாயம் ஈழத்தமிழர் விடயத்திலும் திட்டமிட்டுப் புலம்பெயர் நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இசைக்கு மயங்காதவர்கள் இவ்வுலகில் யாருமில்லை என்பதை புரிந்துகொண்டு இசைப் புயல் எ.ஆர்.ரஹமானின் இசைநிகழ்ச்சியை தியாக தீபம் திலீபனின் உண்ணாநோன்பு இடம்பெற்ற காலப்பகுதியில் புலம்பெயர் நாடுகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஒரு சில ஈழத்தமிழரின் சமுக எதிர்ச்செயற்பாட்டாளர்களால் செய்யப்பட்டுள்ளது. ஹிட்லரின் திசைதிருப்பும் மூலோபாயம் ரஹமானின் இசைவடிவில் ஈழத்தமிழர்களின் நினைவஞ்சலிகளில் மக்கள் கலந்துகொள்ளாது திசை திருப்ப பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இசை நிகழ்ச்சியைத் தவிர்த்துக்கொள்ளுமாறு இசைப் புயல் ரஹமானுக்கு பல தமிழ் அமைப்புகளால் கடிதங்கள் அனுப்பினர். அவற்றில் ரஹமான் ஒரு நல்ல தமிழ் உணர்வாளர் ஈழத்தமிழரின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு இந்நிகழ்வைப் பிற்போடுவார் என்று நம்பிக்கை தெரிவித்தனர். இதன்வழி இந்தக் கலை வழி ஈழத்தமிழர்களைத் திசை திருப்பும் சதிவலைக்குள் இருந்து திரு ரஹமான் தன்னை விடுவித்துள்ளார் என்ற செய்தி இப்பத்திரிகை அச்சுக்குப் போகையில் கிடைக்கிறது. ஆயினும் இதனை உறுதிசெய்ய இயலாதுள்ளது. செய்தி உண்மையாக இருப்பின் ரஹ்மானுக்கு நன்றி.

ஈழத் தமிழ் மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப தமிழினப் பகைமை அரசாங்கங்கள் செய்யும் இப்பரப்புரை பெரும்பாலும் ‘தவறானதிசை’ அல்லது ‘சிதறல்’ என்று அரசியல் அறிவியலில் அழைக்கப்படுகிறது. இது ஒரு தந்திரோபாயமாகும். இது முக்கியமான அரசியல் நகர்வுகள் அல்லது நிகழ்வுகளில் இருந்து பொது மக்களின் கவனத்தை மாற்ற முயலும் தந்திரமாகும். இத்தகைய திசை திருப்பும் தந்திரங்களை அடையாளம் காண மக்கள் எக்காலத்திலும் விழிப்புடன் இருக்கவேண்டும். முக்கியமான நினைவெழுச்சி நிகழ்வுகள் அல்லது ஒன்றுகூடல்களின் போது திசைதிருப்பும் தந் திரங்கள் அரச ஆதரவாளர்களால் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

வெவ்வேறு கண்ணோட்டங்களைப் பெற இனத்திற்கு எதிராக திசை திருப்பலாக ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளைப் பற்றி மற்றவர்களுடன் விவாதிக்க வேண்டும். சிந்தனைமிக்க விவாதங்களில் ஈடுபடுவது சாத்தியமான திசைதிருப்பல் தந்திரோ பாயங் களைக் கண்டறியவும் அதற்கெதிரான செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் ஊக்கு விக்கவும் உதவும். நினைவேந்தல் நிகழ்வுகளின் காலத்தில் அதனை திசை திருப்ப ஒழுங்கு செய்யப்படும் களியாட்ட நிகழ்வுகளையும் அவற்றின் சாத்தியமான தாக்கங்களையும் பகுப்பாய்வு செய்ய உங்கள் திறனாய்வுச் சிந்தனை திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள். தமிழீழ மக்களே! தூயக தேசிய தன்னாட்சி உணர்வை பாதிக்கும் வகையில் தகவல் வழங்கப்படு வதை அடை யாளம் காணுங்கள். அவற்றை வெளிப்படுத்தவும் எதிர்க்கவும் மக்கள் சபைகளாக உங்களை முன்னிறுத்தி தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதை உலகுக்கு உறுதி செய்ய ஈழத்தமிழ்க் கலை இலக்கிய பண்பாட்டு உணர்வுகளை மக்கள் சபைகள் வழி தாயகத்திலும் உலகிலும் மீண்டெழச் செய்யுங்கள்.

# அமசோன் மழைக்காடுகளைப் பேணிப்பாதுகாக்க

# ஒன்றிணையும் எட்டு நாடுகள்

தமிழில்: **ஜெயந்திரன்**

உலகின் மிகப்பெரிய மழைக்காடான அமசோன் மழைக்காட்டைப் பேணிப் பாதுகாப்பதற்காக, தாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பணியாற்ற ஆயத்தமாக இருப்பதாக, கடந்த செவ்வாய்க்கிழமை பிரேசிலின் அதிபரான லூயிஸ் இன்னாசியோ லூலா தா சில்வாவினால் *(Luiz Inacio Lula Da Silva)* ஒழுங்குசெய்யப்பட்ட உச்சி மகாநாட்டில், அமசோன் ஆற்றுப்படுக்கையைக் கொண்டிருக்கின்ற எட்டு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள்.



பிரேசிலில் குறிப்பிட்ட சந்திப்பு இடம்பெற்ற நகரத்தின் பெயரில், பேலெம் பிரகடனம் *(Belem Declaration)* என அழைக்கப்படுகின்ற இப்பிரகடனம், மோசமான காடழிப்பைத் தடுப்பதற்கான வழிவரைபடத்தைக் முன்வைத்திருக்கிறது. பெரும் விவசாய முயற்சிகள் காரணமாகவும், காணி அபகரிக்கப்படுவதன் காரணமாகவும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற காடழிப்பின் காரணமாக, இந்த மழைக்காடு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி, பூமியின் காலநிலை மாற்றத்திலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

சுற்றுச்சூழல் கட்டமைப்புகளை உலகளாவிய அளவில் பேணிப்பாதுகாக்கும் நோக்குடன், மழைக்காடுகளை தன்னகத்தே கொண்டிருக்கின்ற ஏனைய நாடுகளுக்கிடையிலும் இன்னுமொரு ஒப்பந்தம் உருவாக இந்தச் சந்திப்பு வழிவகுத்திருக்கிறது. இவற்றுள் கொங்கோ சனநாயகக் குடியரசு, கொங்கோ குடியரசு, இந்தோனேசியா போன்ற நாடுகள் உள்ளடங்குகின்றன.



அமசோன் மழைக்காடுகள் பல்வேறு வகையான உயிரினங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது மட்டுமன்றி, காலநிலை மாற்றத்தைத் தடுத்து நிறுத்தும் முயற்சியிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. இதற்கான முக்கிய காரணம் என்னவென்றால், வளிமண்டலத்தை வெப்பமாக்குகின்ற காபனீரொட்சைட் வாயுவின் பெரும்பகுதியை இந்த மழைக்காடுகள் உறிஞ்சுகின்றதே இதற்கான முக்கிய காரணமாகும். கடந்த அரைநூற்றாண்டு காலப்பகுதியில், இந்த மழைக்காட்டின் *17* வீதமான பகுதி முற்றாக அழிக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி, கணிசமான பகுதிகள் பாதிப்புகளை எதிர்கொண்டிருக்கின்றன.

இந்த அமசோன் மழைக்காடு, மேலும் அழிவுகளை எதிர்கொள்ளுமாக இருந்தால் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் அழிவுக்கு உட்படுவது மட்டுமன்றி, இந்தப் பசுமை இல்ல வாயுக்களை உள்வாங்குவதற்குப் பதிலாக அதனை வெளிவிடும் ஆபத்தான நிலையும் ஏற்படலாம் என்று அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. இந்த மழைக்காட்டின் ஒரு சில பகுதிகள் அவ்வாறான நிலையை ஏற்கனவே அடைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

இதற்கு முன்னர் பிரேசிலின் அதிபராகப் பதவிவகித்த பொல்சோனாறாவைப் *(Bolsonaro)* பதவியிலிருந்து அகற்றிய ஏழு மாதங்களுக்குள், நாடுகளுக்கிடையே காலநிலை தொடர்பான விழிப்புணர்வைக் கட்டியெழுப்பும் நோக்குடன் அதிபர் லூலா தொடர்ச்சியாக எடுத்துவரும் முயற்சிகளில் இது மிகவும் முக்கியமானதாகும். போல்சோனாறோ அதிபராக இருந்த நாலு வருடங்களில் பொருண்மிய நோக்குடன் இந்த மழைக்காடுகளின் கணிசமான பகுதிகள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

அமசோனைப் பாதுகாப்பதை லூலா தனது தேர்தல் பரப்புரையின் ஓர் முக்கிய விடயமாகக் கொண்டிருந்தார். செய்மதி மூலம் பெறப்பட்டுள்ள ஆரம்ப தரவுகளின் படி லூலா பதவிக்கு வந்ததன் பின்னர் மழைக்காடழிப்பு *42* வீதத்தால் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வெளியாகியிருக்கிறது.

"உலக நாடுகளுடன் ஒரு புதிய உறவைக் கட்டியெழுப்ப உதவும் கடவுச்சீட்டே அமசோன்" என்று தெரிவித்த லூலா, "இந்த உறவு ஒரு சமச்சீரான உறவாக அமையும் ஏனென்றால் ஒரு சிலரின் நன்மைக்காக எமது வளங்கள் சுரண்டப்படமாட்டாது என்பது மட்டுமன்றி எல்லோரது பயன்பாட்டுக்காகவும் அவை பேணிப்பாதுகாக்கப்படும்" என்று அந்த சந்திப்பில் அவர் ஆற்றிய உரையில் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.



அமசோன் ஆற்றுப்படுக்கையிலுள்ள எட்டு நாடுகளுக்கிடையே (பொலிவியா, பிரேசில், கொலம்பியா, எக்குவடோர், கயானா, பெரு, சூரிநாம், வெனிசுவேலா) ஒருங்கிணைந்த செயற்பாட்டுக்கான அடிப்படையை இந்த ஒப்பந்தம் கொண்டிருக்கிறது. சட்டவிரோதமாக கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல், மரக்குற்றிகளை வெட்டுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்க இந்த ஒப்பந்தம் வழிசமைப்பதோடு, இவ்வாறான பணிக்கென ஒதுக்கப்பட்ட வங்கிகள் அபிவிருத்திக்கும் மற்றும் குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கான வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் தேவையான நிதியைத் திரட்டுவதற்கு வழிவகுக்கும்.

அமசோன் மற்றும் காலநிலைமாற்றம் போன்ற விடயங்களைக் கையாளுவதற்கென ஒரு பிரத்தியேக விஞ்ஞானிகள் குழுவை உருவாக்கவும் இந்த இந்த ஒப்பந்தத்தில் இடம் இருக்கிறது.

அடையாள ரீதியில் குறிப்பிட்ட ஒப்பந்தம் ஒற்றுமையை ஏற்படுத்திய பொழுதிலும், லூலா முன்னெடுக்க விரும்பிய இன்னொரு முக்கிய செயற்பாடு நிறைவேறவில்லை.

*2030* ஆண்டளவில் பொலிவியாவிலும் வெனிசுவேலாவிலும் மழைக்காடழிப்பை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு இருநாடுகளினதும் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என பிரேசிலின் அதிபர் லூலா பல கடந்த பல மாதங்களாக முயற்சி எடுத்து வந்துகொண்டிருந்தார். மற்றைய ஆறு நாடுகளதும் அதிபர்கள், ஏற்கனவே *2021* இல் காலைநிலை தொடர்பான உச்சி மகாநாடு கிளாஸ்கோவில் *(Glasgow)* நடைபெற்ற போது, இந்த முடிவை எட்டியிருந்தனர். மழைக்காடுகளில் எல்லாவிதமான பெற்றோலிய அகழ்வுப் பணிகளும் முழுமையாக நிறுத்தப்படவேண்டும் என்று இந்தப் பிரதேசத்தில் மிகவும் முற்போக்கான கொள்கைகளை உடையவரான கொலம்பியாவின் அதிபர், குஸ்தாவோ பெற்றோ *(Gustavo Petro)*, பிரேசிலின் அதிபருக்கு அழுத்தம் கொடுத்து வந்தார். இதற்கு மாறாக அமசோன் ஆற்றின் முகத்துவாரத்தில் பெற்றோலியத்தை பெருமளவில் எடுப்பதற்கு பிரேசில் திட்டமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு வகையான நோக்கங்களும் வெற்றியளிக்கவில்லை.




"மழைக்காடுகளைப் பேணிப்பாதுகாக்க அமசோன் நாடுகளால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, இந்த உச்சி மகாநாடு மிகவும் முக்கியமான ஒரு முயற்சி என்பதில் எந்தவித ஐயமும் இல்லை என்றும் ஆனால் இது போதாது" என்று பிரேசிலில் உள்ள கெற்றூலியோ வர்காஸ் *(Fundacao Getulio Vargas)* அமைப்பில் பன்னாட்டு சுற்றுச்சூழல் விவகாரங்கள் தொடர்பான கற்கைநெறியை மேற்கொண்டு வருகின்ற எடுவார்தோ வியோலா *(Eduardo Viola)* கருத்துத் தெரிவித்தார். "இவர்களின் அர்ப்பணிப்பு முற்றிலும் வேறுபாடானது. பிரேசிலுக்கு வெளியே ஏனைய நாடுகள் இந்த ஒப்பந்தத்துக்கு எவ்வளவு தூரம் பிரமாணிக்கமாக இருப்பார்கள் என்பது சந்தேகத்துக்குரியதே" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**நன்றி: நியூயோக்ரைம்ஸ்**

**வல்லைப்படு ... தொடர்ச்சி ...**

பதிவுசெய்யப்படவில்லை. அந்த படுகொலையில் ஈடுபட்ட எந்த அதிகரியும் இதுவரை தண்டிக்கப்படவுமில்லை.

சீக்கியர்கள் மீதான படுகொலைகளுக்காக சீக்கிய மக்களிடம் மன்னிப்புக் கோரிய இந்திய பிரதமர் வல்வைப் படுகொலைகளுக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோரவில்லை. வியட்னாம் படுகொலைக்காக அனுதாபப்பட்ட அனைத்துலக சமூகம் கூட வல்வைப் படுகொலைகள் தொடர்பில் கவனம் கொள்ளவில்லை என்பது தான் வரலாறு.

# ஆயுதங்களை வழங்குவது மேற்குலகம்
# மோதி அழிவது அயல்நாடுகள்

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**



மேற்குலக நாடுகளின் உதவிகளுடன் நைஜெர் மீதான படை நடவடிக்கை ஒன்றிற்கு மேற்கு ஆபிரிக்க பொருளாதார கூட்டணி நாடுகள் தயாராகி வருகின்றன. மாலி, புர்கினா பசோ மற்றும் நைஜெர் நாடுகளுக்கான பயண எச்சரிக்கையை விடுத்துள்ளது பிரான்ஸ். அங்குள்ள தமது மக்களை அவசியமின்றி தங்க வேண்டாம் என தெரிவித்துள்ளது சீனா.



அதேசமயம், நைஜெரில் ஆட்சியை கைப்பற்றிய இராணுவம் அதனை முன்னைய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என தெரிவித்து மேற்கு ஆபிரிக்க பொருளாதார கூட்டமைப்பினால் விடுக்கப்பட்ட காலக்கெடு கடந்த வார இறுதியுடன் முடிவடைந்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் எந்த நிலையிலும் தாம் பின்வாங்கப்போவதில்லை என தெரிவித்துள்ள நைஜெர் அரசு ரஸ்யாவின் கூலிப்படையான வக்னெர் குழுவிடம் ஆதரவு கேட்டுள்ளது.

அதாவது ஆபிரிக்க கண்டத்தில் புதிய களமுனை ஒன்று திறக்கப்படும் ஆபத்துகள் அதிகரித்து செல்கையில், சீனா மீதான பிடியை மெல்ல மெல்ல மேற்குலகம் இறுக்கிவருகின்றது.

ஐந்தாம் தலைமுறை விமானங்களான அமெரிக்காவின் எப்-35 விமானங்களை இத்தாலி யப்பானுக்கு நகர்த்தியுள்ளது. கிழக்கு ஆசியாவில் படைத்துறை பிரசன்னத்தை அதிகரிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் நடவடிக்கையில் இதுவும் ஒன்று. அமெரிக்காவின் எப்-35 விமானங்களின் தயாரிப்பு வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு 110 விமானங்கள் பாவனையில் இருக்கும் என்றும், 2024 ஆம் ஆண்டு 19 நாடுகளில் 150 விமானங்கள் பாவனையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

அமெரிக்காவின் எப்-35 இற்கு இணையான சீனாவின் புதிய ஐந்தாம் தலைமுறை விமானமான ஜே-20 விமானங்களில் தற்போது 80 விமானங்கள் பாவனையில் உள்ளன. 2024 ஆம் ஆண்டு அது 120 ஆக அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலியை தொடர்ந்து பிரித்தானியாவும் தனது குயின் எலிசபத் விமானந்தாங்கி கப்பலை பசுபிக் பிராந்தியத்தில் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்போவதாக தெரிவித்துள்ளது. அதிலும் எப்-35 விமானங்கள் தரித்து நிற்கும் வசதிகள் உண்டு. யப்பானில் ஈயூரோபைற்றர் எனப்படும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தாக்குதல் விமானங்களை நகர்த்தியுள்ள ஜேர்மனி, எதிர்காலத்தில் எப்-35 ரக விமானங்களை யப்பானில் நிறுத்தவுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.



மேற்குலகத்தின் படைத்துறை மேலாண்மையை கிழக்கு ஆசியாவில் தக்கவைப்பதில் ஐரோப்பியநாடுகள்அக்கறைசெலுத்திவருகின்றன. அங்கு நவீன ஆயுதங்களின் பரம்பல் அதிகரித்து வருகின்றது. எப்-35 விமானங்களில் பல குறைபாடுகள் உள்ளபோதும் மேற்குலகத்திடம் உள்ள ஒரேயொரு ஐந்தாம் தலைமுறைவிமானம் அது என்பதால் அதனை நோக்கி கூட்டணி நாடுகளின் கவனம் குவிந்துள்ளது.

அதேசமயம், சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் கைச்சாத்திட்டிருந்த இத்தாலி அதில் இருந்து விலகிக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது. மறுவளமாக இலங்கையில் உள்ள சீனாவின் பிரசன்னத்தை முறியடிக்கும் முயற்சிகளை யப்பான் மேற்கொண்டு வருகின்றது. இலங்கையின் எரிபொருள் அபிவிருத்தி திட்டங்களை கையகப்படுத்த இந்தியா ஊடாக அது முற்பட்டுவருகின்ற அதேசமயம், இலங்கை கடற்படையினரை தனது பசுபிக் கடற்பிராந்தியத்திற்குள் இழுக்கவும் முற்பட்டுள்ளது.



ஆசியாவில் கிழக்கிலும் தெற்கிலுமாக சீனாவை ஒரு நெருக்கடிக்குள் வைத்திருக்கும் அதேசமயம், ரஷ்யா மீதான தாக்குதலை அதிகரித்து, அதனை தனிமைப்படுத்தும் முயற்சிகளும் அரங்கேறி வருகின்றன. சவுதிஅரேபியாவின் ஜெட்டா நகரில் உக்ரைனில் அமைதியை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தை ஒன்று அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் இடம்பெற்றுள்ளது.



போரில் ஈடுபட்ட இருதரப்பில் ஒரு தரப்பான ரஸ்யாவை ஒதுக்கிவிட்டு இடம் பெறும் பேச்சுவார்த்தைகள் எந்த பலனையும் தராது என்பது ரஸ்ய வெளிவிவகார அமைச்சக பேச்சாளரின் கருத்து.

ஒருபுறம் பேச்சுக்கள் நடக்க மறுபுறம், ரஸ்யாவின் கருங்கடல் பகுதியில் ஆளில்லாத வெடிமருந்து நிரப்பப்பட்ட கலங்கள் மூலம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது உக்ரைன். பல கலன்கள் அழிக்கப்பட்டாலும் ஒரு கலம் மோதியதில் ரஸ்யாவின் தரையிறங்கு கலம் ஒன்று சேதமடைந்ததாகவும், வேறு ஒரு தாக்குதலில் எண்ணைதாங்கி கப்பல் ஒன்று சேதமடைந்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதல்களின் பின்னனியில் பிரித்தானியா இருப்பதாக ரஸ்யா குற்றம் சுமத்தியுள்ளது.

அதேசமயம், உக்ரைனுக்கு நவீன ஆயுதங்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்குலக நாடுகள் தீவிரப்படுத்தி வருகின்றன. பிரான்ஸ் ஸ்கல்ப் (SCALP Missiles) எனப்படும் 290 கி.மீ தூரவீச்சுக் கொண்ட 50 ஏவுகணைகளை வழங்கியுள்ளது. இது பிரித்தானியா வழங்கிய ஸ்ரோம் சடோ ஏவுகணைக்கு இணையானது. பிரான்ஸ் வழங்கிய ஏவுகணைகளில் உக்ரைன் அதிபர் தனது கையெழுத்தை பொறித்த பின்னர் டொனஸ்க் பகுதியை நோக்கி 12 ஏவுகணைகள் ஏவப்பட்டன. அதில் 9 ஏவுகணைகளை ரஸ்யாவின் பன்சேர் (Pantsir Air Defense) வகை ஏவுகணை இடைமறிப்பு ஏவுகணைகள் அழித்த போதும், 3 ஏவுகணைகளால் பாலம் ஒன்று சேதமடைந்துள்ளது.



மேலும் அமெரிக்காவின் எப்-16 விமானங்களுக்கான பயிற்சிகளையும் உக்ரைன் விமானிகள் ஆரம்பித்துள்ளனர். நேட்டோ தளம் ஒன்றிற்கு சென்ற உக்ரைன் அதிபர் அதனை நேரிடையாக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# நான் வீழ்ந்தாலும் எனது மக்களிலிருந்து ஒரு வீரன் பிறப்பான்

பரணி கிருஸ்ண ரஜனி



இன்று மேற்குலகத்தைக் கலங்கடித்துக் கொண்டிருக்கும் முப்பந்தைந்து வயதே நிரம்பிய ஆபிரிக்க நாடான *Burkina Faso* இன் தளபதி. மாலி, புர்கினோ பாசோவைத் தொடர்ந்து இன்றைய *Niger* நாட்டுப் புரட்சியின் பிதாமகன்.

மேற்குலக ஆதிக்கத்திலிருந்து முழு ஆபிரிக்காவையும் மீட்டெடுப்போம் என்று சபத மிட்டு அதற்காகத் துரிதமாக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார் *Ibrahim traoré.*

அதன் முதல் கட்டமாக ஒரு இராஜதந்திர உத்தியாக ரஸ்யாவுடன் கைகோர்த்திருக்கிறார்.

ஏற்கனவே உக்ரைன் நெருக்கடிக்குள் சிக்கித் திணறும் மேற்குலகத்திற்கு எதிரான களமுனையை ஆபிரிக்காவில் திறந்திருக் கிறார் *Ibrahim traoré.*

*Ibrahim traoré* போன்றே அன்றைய *Burkina Faso* நாட்டின் புரட்சியாளன் தோமஸ் சங்காரா கிளர்ந்தெழுந்தபோது உலக அரச பயங்கர வாதத்தால் படுகொலை செய்யப்பட்டார்.

### வரலாறு திரும்புகிறது

மூன்று தசாப்தங்கள் கழித்து அந்த மண்ணிலிருந்து *Ibrahim traoré* என்ற புரட்சியாளன் வெடித்துக் கிளம்பியிருக்கிறான்.

பாட்ரிஸ் லுமும்பா வில் தொடங்கி சமோரா மோசஸ் மார்சல், தோமஸ் சங்கரா என்று ஆபிரிக்கப் புரட்சியாளர்களின் பட்டியல் நீளமானது. அதில் தற்போது *Ibrahim traoré* ம் இணைந்து கொள்கிறார்.

ஆனால் இவர்கள் அனைவரும் வரலாற்றின் ஓர வஞ்சனைக்குள் - இருட்டடிப்புக்குள் தள்ளப்பட்டவர்கள்.

காரணம் எளிமையானது.அதாவது இவர்கள் அரச பயங்கரவாத உலக ஒழுங்கை ஈவிரக்கமின்றி குலைக்க முயன்றதுதான் காரணம்.

ஏனைய புரட்சியாளர்கள் ஏதோ ஒரு புள்ளியில் இன்றைய அரச பயங்கரவாத உலக ஒழுங்கின் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்மடிந்து போனதால் வரலாற்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள் ளார்கள்.

### இதுதான் அதன் சூட்சுமம்

தலைவர் பிரபாகரனும் தமிழீழ விடுதலையினூடாக அரச பயங்கர வாதத் தடைகளிலிருந்து உலகில் அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் தேசிய இனங்களை விடுவிக்கும் சூட்சுமங்களைத் தன்னகத்தே கொண்டவராக அடையாளம் காணப்பட் டார்.



இதனால் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் வரலாற்றின் ஓர வஞ்சனைக்குள் தள்ளவே இன்றைய உலக ஒழுங்கு பெரும் பிரயத்தனப் படுகிறது.

இன்றைய ஆபிரிக்கப் புரட்சியினூடாக நமக்கு கிடைக்கும் செய்தி என்னவென்றால் 'நந்திக்கடல் கணிதம்' உலகின் வேறு ஒரு முனையில் தனது சமன்பாடுகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறது என்பதுதான்.

புரட்சியாளன் தோமஸ் சங்கரா தான் மடியும் முன் சொன்னார். 'என்றும் ஏகாதிபத்தியத்திற்கு இந்த மண் அடி பணியாது. நான் வீழ்ந்தாலும் எனது மக்களிலிருந்து ஒரு வீரன் பிறப்பான். ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவான்' என்றார்.

தோமஸ் சங்காரா கொல்லப்பட்ட அடுத்த வருடம் பிறந்த *Ibrahim traoré* இன்று தோமஸ் சங்காராவின் கனவை மட்டுமல்ல முழு ஆபிரிக்க மக்களின் கனவையும் சுமந்தபடி களத்தில் நிற்கிறார்.

தமிழீழமும் ஒரு நாள் புரட்சியில் குதிக்கும் ஒரு விடுதலை வீரனை பிரசவிக்கும் என்பதன் நம்பிக்கைக் குறியீடு தான் *Burkina Faso* உம் *Ibrahim Traoré* உம்.

• • •

# இளையோரே சிகரம் நீங்கள்

# கற்றுக்கொள்ளுங்கள், கற்றுக்கொடுங்கள்

கவிதா ஆல்பர்ட்

*"கற்றது கைம்மண் அளவு*
*கல்லாதது உலகளவு"* என்பர் பெரியோர்.

அறிவு கடலைப் போன்றது. ஆராய முடியாத அதிசயங்களை உள்ளடக்கியது. நாம் நமது அறிவை விரிவு செய்யச் செய்ய, விந்தையான பலவற்றைக் கண்டுபிடிக்கிறோம். நமது தொழில்நுட்ப அறிவுத் தேடலின் விளைவாக நொடியில் உலகை அழிக்கும் அனைத்தையும் கண்டுபிடித்ததில் இறுமாந்து நிற்கும் நாம், வாழ்வதற்காகக் கொடுக்கப்பட்ட அறிவை, நாம் வீழ்வதற்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். நாம் வெட்டிய குழியில் நாமும் தான் விழ நேரிடும் என்கிற முன்மதி இல்லாமையால் தான் உலகம் பல வீழ்ச்சிகளைக் கண்டு கொண்டிருக்கிறது.

"வாள் எடுத்தவன் வாளால் மடிவான்" என்பது இறைவார்த்தை. இது வார்த்தை அல்ல. உண்மை என்பதற்குப் பல உதாரணங்களை இதற்கு முன் நடந்த நிகழ்வுகளின் வழியாக நாம் கண்டுணர்ந்திருக்கிறோம். இயற்கைக்கும், நாம் நிகழ்த்தும் இழிவுக்கு அதுவும் நமக்குப் பல பாடங்களைத் தந்துகொண்டிருக்கிறது. ஆனால் நாம் தான் மேதாவிகள் என்பது போல இன்றைய இளையோரின் வாழ்வு இறுமாப்பினாலும் அகம் பாவத்தாலும் அழிந்துகொண்டிருக்கிறது.



ஞானிகளிடமும் மேதைகளிடமும் நாம் அணுகி, அவர்களது சாதனைகளைப் புகழ்ந்து போற்றினோமானால், அவர்கள் மிகச் சாதாரணமான மைல்கற்களையே தாங்கள் கடந்ததாகவும், இன்னும் கடக்க வேண்டிய தூரம் ஏராளம் உள்ளது என்றும் தன்னடக்கமாகப் பதில் கூறுவார்கள். ஆம் அது தான் உண்மை. நாம் கடந்து சென்ற மைல்கற்கள் மிகவும் குறுகியது. நாம் கடந்து செல்ல வேண்டிய மைல்கற்களே, ஏராளம் உள்ளன என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கற்றுக்கொள்வது ஒன்றும் கௌரவத்துக்கு இழுக்கானது அல்ல. வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டு இருப்பவர்களால் மட்டும் தான் பிறருக்குக் கற்றுக்கொடுக்க முடியும். உலகில் விரைந்து பரவும் நாகரிக வளர்ச்சியும், தொழில்நுட்ப வளர்ச்சியும் மனிதனை மின்னல் வேகத்தில் செயற்படத் தூண்டி, உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் கற்றுக்கொள்ள வேண்டியது விஞ்ஞானத்தின் விளைவுகளையும் அணுவாயுதங்களின் அபாயங்களையும் தான்.

வனங்களாய், வனப்புகளாய் மனித குலத்தின் ஆதாரமாக விளங்கும் அத்தனை இயற்கை வளங்களையும் வாரி எடுத்து அழிவுக்குரிய போர்க்கருவிகளால் அடித்துக் கொள்வதால் யாரும் யாரிடமிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியாது. இயேசு கூறியது போன்று "உங்கள் கொலைக் கருவிகள் அனைத்தையும் விவசாயக் கருவிகளாக மாற்றுங்கள்" என்கிற இறைவார்த்தையின் வலிமையையும் உண்மையையும் நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மனிதகுலத்துக்குத் தேவையானது எது, உலகை அழிவுறாமல் பாதுகாக்க உதவுவது எது என்பதை உணர்ந்து அதில் நமது அறிவையும் ஆர்வத்தையும் செலுத்திக் கற்றுக்கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் எவையெல்லாம் அறிவுக்குரியவையாக இருந்தன. அதன் விளைவுகள் எவையெவை என்பதை ஆராய்வதே இளையோர்களாகிய நீங்கள் ஆராய்ந்து அறிந்து கொள்வதே சிறந்த கல்வி முறையாக உள்ளது.

இயற்கையோடு இணைந்து உருவாக்கப்படும் அனைத்தும் நம்மை அரவணைத்துக் காக்கும் அரண்களாக அமைந்துவிடும். அதனால் நமது வாழ்விடங்களைப் பசுமைக் குடில்களாக அமைப்பதும், நமக்கு வேண்டிய தரமான உணவுகளை நாமே உற்பத்தி செய்து உண்பதும் நமது கண் முன்னால் அழிந்து கொண்டிருக்கும் இயற்கையை அழிவுறாமல் காப்பதும் எப்படி என்பதை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

மதம், சாதி, இனம், மொழி இவையனைத்தும் நம்மையும் நமது மனிதகுலத்தையும் பிரிவினைக்கு உள்ளாக்காத வகையில், ஒருமைப்பாட்டை வளர்க்கும் உன்னதமான கோட்பாடுகளையும் தத்துவங்களையும் நமக்கு உருவாக்கித் தந்த மேதைகளையும் நாம் நமது முன்னோடிகளாகக் கொண்டு, அவர்களது வழித்தடத்தை நமது சந்ததியினர் வழிநடக்கும் பாதைகளாக மாற்ற வேண்டும்.



நாம் கற்றுக்கொண்ட நல்லவற்றை, நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும், மனிதாபிமானத்தை அறியாதவர்களுக்கும் கற்றுக் கொடுப்பது மிகவும் அவசியம். இந்தப் பூமியில் எத்தனையோ இளையோரால் உருவாக்கப்பட்ட உழைப்பு முத்துக்கள்தான், பூமியைப் புன்னகைக்கச் செய்து கொண்டிருக்கின்றன.

மாட மாளிகைகளும் ஆடம்பர பங்களாக்களும், பூமியின் மனக்குமுறலில் அவ்வப்போது மறைந்து போவதை நாம் அறிகிறோம். ஆனாலும் நமது ஆசை நம்மை விட்டுவைப்பதில்லை. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது என்பர். நாம் சிகரம் தொட வேண்டும் என்று நினைக்கும் போது, நமது எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் கற்றுத்தெரிந்த ஞானமும் கற்றறிந்ததை மற்றவர்களுக்கும் கொடுத்து, அவர்களையும் ஞானிகளாக, மேதைகளாகவும் மாற்றுவதில் தான் நமது பிறப்பின் மேன்மை இருக்கின்றது.

பூமியில் நாம் பிறந்துவிட்டோம். நமது அறிவு கொண்டு நாம் ஆயிரமாயிரமாய் சம்பாதிக்கும் வேலையைப் பெற்றுவிட்டோம். பட்டமும் பணமும் பகட்டான வாழ்வைத் தந்தபின் நாம் ஏன் நமக்கான நேரத்தை பிறருக்காகச் செலவிட வேண்டும்? என்று எண்ணுவது நம்மைச் சுயநல கூட்டுக்குள் நிறுத்தி வைத்து விடும். ஆதனால் யாருக்கும் எந்தவிதமான பயனும் இல்லாமல் போய்விடும். நமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும், சரித்திரத்தில் இடம்பிடிக்காமலும் போய்விடும்.

நம்மால் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டவும் முடியாது. அதனால் அடுத்து சந்ததி ஆற்றுப்படுத்தும் ஆதரவு தேடும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

ஆகவே என் இனிய இளையோரே, நீங்கள் இந்த சமூகத்திடமிருந்தும் இந்த உலகத்திடமிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம் இருக்கிறது என்பதை உணருங்கள். கற்றுக்கொள்ள வேண்டியதை கற்றுக்கொள்ள வேண்டிய நேரத்தில் கற்றுக்கொள்ளுங்கள். பிறருக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதைக் கற்றுக்கொடுக்க வேண்டிய நேரத்தில் கற்றுக்கொடுங்கள்.



வன்முறைகளும் பேரழிவுகளும் பெருகி வரும் இந்தக் காலகட்டத்தில், அமைதியும், அன்பும், ஒற்றுமையும், சமாதானமும், மகிழ்ச்சியும் மக்கள் மனங்களில் நிறைந்திட வேண்டும் என்று நற்போதனைகளையும், நல்லறிவையும் தரும் அறிவுசார் நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் கற்றுக்கொண்டதை பிறரது மனநிலங்களில் விதைத்து, அழிவின் படுகுழிகளில் அவர்கள் விழுந்து விடாமல் பாதுகாப்பதைக் கடமையாக எண்ணுங்கள்.

உலகம், உயர்ந்த எண்ணமுடையவர்களாலும், சிறந்த அறிவுடையவர்களாலும் தான் இன்னமும் பல்வேறு இன்னல்களுக்கு நடுவிலும் அழிவுறாமல் நிலைத்து நின்றுகொண்டிருக்கிறது. ஆகவே எனதருமை இளையோரே, இந்த அழகிய உலகம் அழிவுறாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால், நீங்கள் பூமி தரும் பாடத்தையும், இயற்கை தரும் அனுபவங்களையும், போர்களும் வன்முறைகளும் தருகின்ற படிப்பினைகளையும் தேர்ந்த அறிவுடன் கற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் ஞானத்துடன் கற்றுக்கொண்டதை நமக்குப் பின் வருபவர்கள் ஞானத்துடன் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாக இருங்கள். அது உங்களையும் உயர்த்தும். உலகத்தையும் உயர்த்தும். நமது எதிர்கால சந்ததியினரை வளமாக வாழ வைக்கும்

• • •

## பிழையான ... தொடர்ச்சி ...

நன்மைகளே அதிகமாக வந்தடையும்.

ஏற்கனவே இடம்பெற்ற ஒப்பந்தங்களின் காரணமாக இந்திய வம்சாவளியினர் பலர் தாயகம் திரும்ப நேர்ந்தது. இதனடிப்படையில் 1971 இல் 25,384 பேரும், 1975 இல் 24,570 பேரும், 1979 இல் 23,794 பேரும், 1983 இல் 32,526 பேரும் தாயகம் திரும்பி இருந்தனர். இதேவேளை 1971 இற்கும் 1984 இற்கும் இடையில் 446,338 பேர் தாயகம் திரும்பி இருந்தனர். இத்தகைய நிலைமைகளால் இந்திய வம்சாவளி மக்களின் பலம் இந்நாட்டில் மழுங்கடிப்பட்ட ஒரு நிலைமையையே அவதானிக்க முடிகின்றது. நிலைமைகள் இவ்வாறிருக்கையில் இந்திய வம்சாவளியினர் பிழையான பதிவுகளை மேற்கொள்வது அபாய நிலைமைகளுக்கே வித்திடுவதாக அமையும்.

இந்நிலையில் 1981 ம் ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டின் பின்னர் வெளியிடப்பட்ட அதன் பொது அறிக்கையில் அவ்வாண்டிற்கான சரியான இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களின் எண்ணிக்கை 10 இலட்சத்து 31,656 ஆக இருந்திருக்க வேண்டுமென்றும் இலங்கை குடியுரிமை பெற்று விட்டதன் காரணத்தால் இரண்டு இலட்சத்து 13,000 இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் தம்மை இலங்கைத் தமிழர் என கணிப்பீட்டாளர்களிடம் பதிந்து கொண்டதால் அவர்களின் எண்ணிக்கை எட்டு இலட்சத்து 18,656 பேராகக் காணப்படுவதாகவும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன. இந்நிலையில் மலையகத் தமிழர்கள் தமக்கான அடையாளத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது. எனவே சனத்தொகை கணக்கெடுப்பின்போது தம்மை இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் என்றே அடையாளப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான தெளிவுபடுத்தலை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்குள்ளது என்று இலங்கை தொழிலாளர்காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தி இருக்கின்றார். இதேவேளை கணக்கெடுப்புக்கு வருகின்ற சில அதிகாரிகளும் தோட்டத்தில் வாழ்பவர்கள்தான் இந்தியத் தமிழர்கள், நகரத்தில் வாழ்பவர்கள் இலங்கைத் தமிழர்கள் என எண்ணிக்கொண்டு கணக்கெடுப்பு நடத்துகின்றனர். இம்முறை இவ்வாறான தவறுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

• • •

## இனப்படுகொலை ... தொடர்ச்சி ...

ஆக்கப்படுவதுமான செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

இறுதியாக 12.08.1990 இராணுவத்தினர் பாதுகாப்புடன் சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலயம், வீரமுனை இராமகிருஸ்ண மிசன் ஆகியவற்றுக்குள் புகுந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என 97பேரை படுகொலைசெய்தனர். இந்த படுகொலையின்போது வீரமுனையின் முதல் பெண் பட்டதாரியான பரமேஸ்வரி என்னும் ஆசிரியை முஸ்லிம் ஆயுததாரிகளிடம் இருந்து மக்களை காப்பதற்காக போராடி இறுதியில் தனது உயிரையும் பறிகொடுத்தார். இந்த கொலை வெறித்தாக்குதலின்போது பாடசாலையில் இருந்த சிறுவர்கள் சுவரில் தூக்கி அடிக்கப்பட்டு படுகொலைசெய்யப்பட்டனர்.

இவ்வாறு படுகொலை நடந்து அதில் படுகாயமடைந்தவர்கள் அம்பாறை உட்பட பல வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும் அவர்களும் அங்கிருந்து கொண்டுசெல்லப்பட்டு படுகொலைசெய்யப்பட்டனர்.

இவ்வாறான பெரும் படுகொலையை எதிர்கொண்ட வீரமுனை படுகொலையின் 30வது ஆண்டுநிறைவு இன்றையதினம் உணர்வுபூர்வமான முறையில் அனுஸ்டிக்கப்படுகின்றது.

தமிழர்கள் தம்மீது நடாத்தப்பட்ட படுகொலைகளை மிகவும் எழிமையாக தொடர்ந்து நினைவுகூரும் அதேநேரம் முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களை காட்சிப்படுத்தி தமிழர்களுக்கு எதிரான கருத்துகளும் உணர்வுகளும் விதைக்கப்படும் நிலைமையே இருந்துவருகின்றது.

கடந்த வாரம் காத்தான்குடி படுகொலை காத்தான்குடியிலும் ஏறாவூர் படுகொலை ஏறாவூரிலும் கடையடைப்பு செய்யப்பட்டு பாரிய நினைவுகூரலாக நடைபெற்றது.

ஆனால் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் வெறுமனே நினைவுகூரலாக மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறான தமிழர்கள் மீதான படுகொலைகள் எதிர்காலத்தில் வரலாறுகளாக்கப்பட்டு எதிர்கால சந்ததிக்கு கொண்டுசெல்லப்படவேண்டும். இதற்கான செயற்பாடுகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டும்.

• • •

## ஆயுதங்களை ... தொடர்ச்சி ...

பார்வையிடும் படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அதேசமயம்; அபிரஹாம் வகை 32 டாங்கிகளை வழங்கவும் அமெரிக்கா ஒப்புதல் அழித்துள்ளது.

முதல்கட்டமாக ஐரோப்பாவுக்கு நகர்த்தப்படும் இந்த டாங்கிகள் பின்னர் உக்ரைனுக்கு வழங்கப்படுவதுடன், அதற்கான பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் நிலையங்கள் ஐரோப்பிய நாடுகளில் அமைக்கப்படவுள்ளன.

அதாவது போர் மேலும், மேலும் தீவிரமடையும் சாத்தியங்களோ அதிகரித்து செல்கின்றன. அதனால் ஏற்படும் இழப்புக்களும் அதிகம். அண்மையில் அமெரிக்காவை தளமாக கொண்ட ஊடகம் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் உக்ரைன் படையினரில் 20,000 தொடக்கம் 50,000 பேர் தமது அவையவங்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது செயற்கை அவையவங்கள் பொருத்தியவர்களின் எண்ணிக்கை. அவையவங்கள் பொருத்துவதற்கு அதிக காலம் எடுக்கும் என்பதால் உண்மையான எண்ணிக்கை மிக அதிகம் என தெரிவிக்கப்படுகின்றது. அதாவது முதலாம் உலகப்போரில் பிரித்தானியா மற்றும் ஜேர்மன் படையினர் சந்தித்த இழப்பை விட இது அதிகம்.

பென்ரகனின் முன்னாள் ஆலோசகர் கேணல் டக்ளஸ் மக்கிரகொரின் கருத்துப்படி 4 இலட்சம் உக்ரைன் படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. ரஸ்யா தனது இழப்பு உக்ரைனின் இழப்புடன் ஒப்பிடும்போது பத்தில் ஒன்று என தெரிவித்தாலும் அதன் இழப்பு 40,000 ஆக இருக்கலாம் என கருதப்படுகின்றது.

ஒரு களமுனையே இத்தகைய பாரிய இழப்புக்களை சந்தித்து வருகையில் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் மேலும் களமுனைகளை திறக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இந்த களமுனைகளில் மோதி அழிவது அயல் நாடுகளே தவிர மேற்குலக மக்கள் அல்ல.

அதனை தான் யப்பானில் குவிக்கப்படும் ஆயுதங்களும், மேற்கு ஆபிரிக்க பொருளாதார கூட்டமைப்பை கொம்பு சீவிடும் மேற்குலக நாடுகளின் நடவடிக்கைகளும் எடுத்து காட்டுகின்றன.

• • •

## விக்டோரியாவை ... தொடர்ச்சி ...

உதவிகளையும் அமெரிக்கா நிறுத்தியிருந்தது.

இராணுவ அதிகாரிகளுடனான பேச்சுக்கள் மிகவும் கடினமாக இருந்ததாகவும், முன்னாள் அரச தலைவரையும், தற்போது அரச தலைவராக பொறுப்பேற்றுள்ள இராணுவ ஜெனரலையும் சந்திப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பலன் தரவில்லை எனவும் விக்டோரியா தெரிவித்துள்ளார்.

அவர்கள் தமது நடவடிக்கைகளில் உறுதியாகவே இருக்கினறனர். ஏமக்கு இது ஒரு கடினமான காலம். நாட்டின் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட அவர்கள் தயாராக இருப்ப தாக கூறுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நைஜெரின் புரட்சிக்கு எதிராக 15 நாடுகளை கொண்ட மேற்கு ஆபிரிக்க பொருளாதார கூட்டமைப்பு பொருளாதார தடைகளை விதித்ததுடன், கடந்த ஞாயிற்றுக்கிழமைக்கு (6) முன்னர் ஆட்சியை முன்னாள் அதிபரிடம் கையளிக்க வேண்டும் இல்லை எனில் படை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர்கள் எச்சரித்தபோதும் கடந்த புதன்கிழமை(9) வரை நடவடிக்கை எவையும் மேற் கொள்ளப்படவில்லை.

## பிரேசிலில் ... தொடர்ச்சி ...

அதிபர் லூலா பதவியேற்ற பின்னர் இந்த மாநாடு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

அவருக்கு முன்னர் அரச தலைவராக பதவி வகித்த ஜெர் பொல்சொநாரோவின் காலப்பகுதியில் தான் அதிக காடுகள் அழிக்கப்பட்டிருந்தன. இந்த கூட்டம் என்பது மிகப்பெரும் வெற்றியாகும். ஏல்லா நாடுகளும் சமூகம் தந்துள்ளன. நாம் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் என லூலா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அளவைவிட இரண்டு மடங்கு பெரிதான அமேசன் காடுகள் சூழல் வெப்பமாதலை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. காடுகள் அழிக்கப்படுவதே பூமி வெப்பமாவதற்கு பிரதான காரணம் என வளிமண்டல இரசாயணவியளார் தெரிவித்துள்ளார்.

## மருந்து கொள்வன ... தொடர்ச்சி ...

பொருட்களை கொள்வனவு செய்யாது நிதி மோசடியில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

நிதிக்கான கணக்கறிக்கையும் அங்கு பேணப்படவில்லை. அது மட்டுமல்லாது மருந்துகளை குறைந்த விலையில் அனுமதியற்ற உற்பத்தியாளர்களிடம் வாங்கும் நடவடிக்கைகளையும் சில அதிகாரிகள் மேற்கொண்டு நிதி மோசடி செய்துள்ளனர். இது அங்குள்ள மக்களையும் ஆபத்தில் தள்ளும் செயல்.

இந்த மோசடிகளை செய்த வைத்திய அதிகாரிகளுக்கு அரசியல்வாதிகளின் ஆதரவுகளும் இருந்துள்ளது. இது தமக்கு மிகுந்த கவலை அளித்துள்ளதாகவும், இது தொடர்பில் இலங்கை அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## துப்பாக்கி ... தொடர்ச்சி ...

துன்புறுத்தல்கள், வன்முறைகள் என்பன அதிகளவு இடம்பெறுவதுடன், மருந்துப் பொருட்கள் மற்றும் உணவுக்கும் தட்டுப்பாடுகளும் ஏற்பட்டுள்ளது.

தமது நாட்டின் இந்த நிலைக்கு எதிராக பெருமளவான மக்கள் இந்த வாரம் வீதிகளில் இறங்கி போராடியிருந்தனர். தமக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர்.

காவல்துறையினர் எந்தவித அதிகாரமும் இன்றி சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியாத நிலையில் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




# தொடருந்து சாரதிகளை பற்றி நாம் அறிந்துகொண்டது என்ன?

ஆர்த்திகன்

உலகின் சனத்தொகை அதிகரித்து வருகையில் மக்களின் போக்குவரத்து துறையும் அதிக நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. நகரப் புறங்களில் உள்ள மக்களின் போக்குவரத்து தேவைகளை வீதிகளில் அதிக வாகன நெரிசல்கள் இன்றி தீர்த்து வைப்பதில் தொடருந்துகளின் பணி மகத்தானது.

ஆனால் அதன் சாரதிகளின் நிலை எவ்வாறு இருக்கும்? நாம் யாராவது எண்ணிப் பார்த்த துண்டா? அது தொடர்பான தகவல்களை தான் இந்த பத்தி தொட்டுச் செல்கின்றது.

ரயில் ஓட்டுனரை *“Loco Pilot” (LP)* என்றும், அவருக்கு உதவி செய்பவரை *“Asst. Loco Pilot” (ALP)* என்று கூறுவார்கள். இன்றைய சூழ்நிலையில் அவர்கள் 13 மணி நேரம் வரை வேலை செய்கிறார்கள்.



சிவப்பு சிக்னலை மீறினால் இரண்டு பேருக்கும் வேலை இழக்கும் அபாயம் உண்டு. குறைந்தது 16 மணி நேரம் இடைவெளி தேவை அடுத்த பணிக்குத் திரும்புவதற்கு.

ஒரு ரயில் வண்டி ஓடாமல் சும்மா நின்று கொண்டிருந்தால் ஒரு மணி நேரத்திற்கு 25 லிட்டர் டீசல் செலவாகிறது. 100 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க 400 முதல் 500 லிட்டர் டீசல் செலவாகிறது.

ஒரு ரயில் வண்டி பிரேக் அடித்தால் அது நிற்பதற்கு எடுத்துக் கொள்ளும் தூரம் அந்த வண்டியின் நீளத்தை விட மூன்று மடங்கு நீளம் தேவைப்படுகிறது, தோராயமாக ஒன்றரை கிலோ மீட்டர்.

அதெல்லாம் சரி.. இந்த ரயிலை ஓட்டுபவர்கள் தூங்குவார்களா? அப்படி தூங்கினால் எப்படி கண்டு பிடிப்பது?




தூங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது, ஆனால் இரண்டு பேருமே தூங்க முடியாது யாராவது ஒருத்தர் விழித்து இருக்க வேண்டும்.

VCD எனப்படும் விஜிலன்ஸ் கண்ட்ரோல் டிவைஸ் அவர்களை தூங்க விடாது. ஏனென்றால் ஒரு நிமிடத்திற்கு ஒருமுறை அதில் உள்ள பொத்தானை அமுக்க வேண்டும்.

அப்படி அமுக்கவில்லை என்றால், எட்டு வினாடிக்கு பிறகு விளக்கு எரியும், அதையும் அவர்கள் உதாசீனம் படுத்தினால், அடுத்த எட்டு வினாடிக்கு சத்தமும் சேர்ந்து கொண்டு விளக்கு எரியும், அதையும் உதாசீனம் படுத்தினால், வண்டி தானாகவே நின்று விடும், *Automatic braking system* மூலம்.

ஆனால் அந்த பைலட்டுகள் வண்டியின் வேகத்தை கூட்டுவது, குறைப்பது, ஹாரன் அடிப்பது போன்ற வேலைகளில் இருந்தால், அந்த பொத்தானை அமுக்க வேண்டியது இல்லை.

இந்த காலத்தில் தான், பட்டன் போன்ற பொத்தானை அமுக்கிற வேலை, முன் நாளில் எல்லாம் ஒரு பெரிய கம்பியை இழுத்து இழுத்து விட வேண்டும். அதன் பெயர் *“Deadman’s Lever”*.

இன்று வரையில் ரயில்வே ஓட்டுனர்களுக்கு தனியாக கழிப்பறைகள் இல்லை. அடுத்த ஸ்டேஷன் வரைக்கும் அவர்கள் அடக்கி வைக்க வேண்டும்.



ஒரு நிமிடம்தான் ஸ்டேசனில் நிற்கும் அடுத்து சிக்னல் விழுந்த உடன் வண்டி எடுக்கனும். 110 kmph குறையாமல் வண்டி ஓட்டனும். பஞ்சுவாலிட்டி இருக்கு. இதிலே இன்ஜின் பிராபளம்! டிராக்கில் ஏதேனும் பிராப்ளம்! சிக்னல் மனிதர்கள் சூசைட் என கண் விழித்து ஓட்டனும்!

கேட் horn அடிக்கனும்! 60 செக்கண்டுக்கு vcd பிரஸ் பன்னனும்! அசிஸ்டெண்ட் தூங்கிட்டானா அவரை எழுப்பனும்! 27 kwh கரண்டின் கீழ் வேலை! இன்ஜீன் சூடு!

ராத்திரியில் வண்டியின் வேகத்தை பொறுத்து கத்தி போல குத்தும் குளிர். எக்ஸஸ் ஸ்பீடு போக கூடாது! டிரையின் டைமிங் மெயிண்டன் செய்ய வேண்டும்! சிவப்பு சிக்னலை தாண்டினால் ரீமுவ்டு பிரம் சர்விஸ் என பல அழுத்தங்கள் இருக்கு!

இருந்தும் 2000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளை பாதுகாப்பாக கொண்டு சேர்க்கனும்! காடுகளில் போகும் போது செயின் இழுத்து வண்டி நிக்கும் போது யார் உதவியும் இரவு நேரத்தில் கிடைக்காது சிங்கம் புலி யானை என இருக்கும்.

டைம் குறைந்தாலும் விளக்கம் எழுதி கொடுக்கனும். இதேதான் பகல் நேரங்களிலும்! சரக்கு வண்டி எனில் எக்ஸ்பிரஸ்க்காக லூப் லைனில் ஒதுக்குவார்கள்... அப்போ ஸ்டேசன் மாஸ்டர் ரூமுக்கு ஓடனும் அவர் வேண்டா வெறுப்பாக அனுமதிப்பார். முடியாத பட்சத்தில் வாட்டர் கேனில் தண்ணீர் இருந்தால் பொது வெளிக்கு மறைவா போய் இருக்க வேண்டியதுதான்!

சரக்கு வண்டியும் 16 இல் இருந்து 18 மணி நேரத்துக்கும் மேல் வேலை செய்பவர்கள் உண்டு! இதில் சாப்பாடு பிரச்சனை இருக்கு! கடைகளை தேடி ஓடனும்! சாப்பிடும் நேரத்தில் வண்டி ஓட வேண்டிய சூழ்நிலை இருக்கும்.



கண்ட்ரோலர்களோ யாருமே சாப்பிட்டார்களா சாப்பாடு வாங்கி விட்டீர்களா என கேட்பதும் இல்லை அதற்கான நேரமும் ஒதுக்குவதில்லை!

இப்படியாக தொடர்கிறது...தொடர் வண்டியின் பயணம்.

இன்றைய சனத்தொகை மிக்க நகரங்களில் வீதிகளின் பெருமளவான வாகன நெரிசல்களை குறைப்பதில் இந்த தொடர்வண்டிகளில் சேவை மகத்தானது. வளர்ச்சி கண்ட நாடுகளில் நிலத்துக்கு கீழான தொடருந்த சேவை என்பது மக்களின் இயல்பு வாழக்கையை பாதிக்காது அவர்களுக்கான சேவையை வழங்கும் ஒரு தொழில்நுட்ப வளர்ச்சியாகும்.



எதிர்வரும் காலங்களில் இது மேலும் நவீனமயப்படுத்தப்படலாம். சாரதிகள் இன்றி செல்லும் வண்டிகளும் வரலாம். அவ்வாறான ஒரு நிலை ஒன்று ஏற்படும்போது சாரதிகளின் கடினமான வாழ்வில் மாற்றங்களும் வரலாம். அது வளர்முக நாடுகளில் வருவதற்கு மேலும் சில காலம் எடுக்கலாம்.

**தகவல் உதவி: வீடியோ உலகம்**